Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C) ராம்கோ சீமெந்து
(C/790)

முரசு – 01 | திருவள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 31 சனிக்கிழமை (16.07.2011) | பக்கங்கள் 16 | ஓசை – 290


முதல் 3 பந்துகளில் விக்கெட்
06



அழிவுத் திட்டம் அம்பலம்
13


கடைசி மன்னனுக்கு புதிய சிலை
02



காத்திருக்கத் தேவை இல்லை
15

## அப்பட்டமான பொய்க் குற்றச்சாட்டு நிலைமையை விளக்குகிறார் யாழ்.தளபதி



(யாழ்ப்பாணம்)

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது இராணுவம் இடையூறு விளைவித்ததாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டு உண்மைக்குப் புறம்பான தென்றும், இராணுவம் பாதுகாப்பு கடமைகளையே மேற்கொண்டு வருவதாகவும் யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கு களங்கத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே சிலர் இவ்வாறான குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

மூன்று தசாப்தங்களாகப் போலியான பிரச்சாரங்களைச் செய்து அரசியல் நடாத்தி வந்த ஒரு சிலர் தற்போது இராணுவத்துக்கு எதிராகப் பிரச்சார நடவடிக்கைகளை மேற் கொண்டு அரசியல் இலாபம் தேட முயற்

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.கட்டளைத் தளபதி மீது சுமந்திரன் எம்.பி. பாச்சல்

(யாழ்ப்பாணம்)

தன் கீழுள்ள இராணுவத்தினரை கட்டுப்படுத்த தெரியாதவர், எம்மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தெரியாதவர், அரசியல் கட்சிகள் தொடர்பில் விமர்சனம் செய்வது நல்லதல்ல எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண கட்டளைத் தளபதி நேற்று

(15ஆம் பக்கம் பார்க்க)



# இளம் பெண் வெட்டிக் கொலை

# யாழ்.நகரில் நடந்த பயங்கரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதான வீதி, பஸ்ரியன் வீதிச் சந்தியில் இளம் பெண் ஒருவர் நேற்றுப் பட்டப் பகலில் கத்தியால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். நண்பகலுக்கு சற்றுப் பின்னர் மோட்டார் சைக்கிளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியை நோக்கிச் சென்று கொண்டிருந்த இந்த இளம் யுவதியை பஸ்ரியன் சந்தியில் கைப்பையுடன் காத்திருந்த இளைஞர் ஒருவர் வழிமறித்து சிறிது நேரம் உரையாடினார்.

திடீரெனத் தனது கைப்பையில் இருந்து கத்தியொன்றை எடுத்து யுவதி மீது வெட்டினார். கழுத்தில் காயமடைந்த யுவதி நிலத்தில் விழுந்ததும் மேலும் இரு தடவைகள் கத்தியால் யுவதியின் வயிற்றில் குத்தினார்.

தொடர்ந்து தனது கைப்பை யில் தயாராகவிருந்த பெற்றோலை எடுத்த இளைஞன் தன்மீது ஊற்றி தீ மூட்டிக் கொண்டார். தீ சுவாலைவிட்டு எரிய

(15ஆம் பக்கம் பார்க்க)



## தென்மராட்சியில் சமூகநலத் திட்டங்கள் மக்கள் ஆதரவுடன் நேற்று ஆரம்பம்



(சாவகச்சேரி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தலைமையிலான குழுவினர் நேற்றைய தினம் தென்மராட்சி பிரதேசத்திற்கு சூறாவளிப் பயணம் மேற்கொண்டு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்பிரகாரம் காலை 9.00 மணிக்கு நாவற்குழி, கேரதீவு பிரதான வீதிக்கான புனரமைப்பு வேலைகளை அமைச்சர்கள் ஆரம்பித்து வைத்ததுடன், நாவற்குழி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குடிநீர் விநியோகத்தையும், சரசாலைக்கான பிரத்தியேக குடிநீர் விநியோகத்திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

இதேவேளை, சாவகச்சேரி பிரதேச சபையின் கீழ் ஒரு வீதியும், நகரசபையின் கீழ் 2 வீதிகளும் புனரமைப்புச் செய்வதற்குத் தெரிவு செய்யப்பட்டு அதற்கான வேலைத்திட்டத்தையும் ஆரம்பித்து வைத்தனர்.

இதைவிட மனைப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் 3 ஆயிரம் மக்கள் பயனடையும் வகையிலான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், ''பிரிய பியச'' வீட்டுத் திட்டத்தின் கீழ் 8 பேருக்கு

(15ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஆயுதப் புதையல் படையினர் அள்ளிய சுடுகலன்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கொக்காவில், வன்னிவிளாங்குளம், உடையார் கட்டுகுளம் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான ஆட்லறிகளையும் வெடிப் பொருட்களையும் தாம் கைப்பற்றியுள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். 120 மி.மி. மோட்டார் குண்டுகள் 1555, 12.7 மி.மீ துப்பாக்கிகளுக்குப்

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் கடற்தொழில் அபிவிருத்தி 'ஜெயிக்கா' உதவியுடன் செயற்திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடற்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான விசேட செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கிறது. "ஜெயிக்கா" நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்படவுள்ள இத்திட்டத்துக்கான ஆரம்ப ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இதன் முதற்கட்டமாக எதிர்கால மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கான இரண்டாவது செயலமர்வு நேற்று யாழ்.

(15ஆம் பக்கம் பார்க்க)



கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# சங்கிலி மன்னனுக்கு புதிய சிலை நிர்மாணம்

## தவறான பிரச்சாரத்துக்கு முற்றுப்புள்ளி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தை ஆண்ட கடைசி மன்னன் சங்கிலியனின் உருவச் சிலையை புதுப்பொலிவுடன் உருவாக்குவதற்காக பழைய சிலை மாநகரசபையால் அகற்றப்பட்டுள்ளதுடன், அப்பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.



யாழ் மாநகரசபையின் ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் போட்டியிட்ட ஈழமக்கள் ஜனநாயக கட்சியினர் இறுதியாக நடைபெற்ற மாநகர பொதுக்கூட்டத்தில் முத்திரைச் சந்தியில் வைக்கப்பட்டுள்ள சங்கிலிய மன்னனின் சிலையை உடைத்து புதிய சிலையை வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இதற்கு எதிரணி உறுப்பினர் விந்தன் சிலையை அகற்றாது புனரமைப்பு செய்யுமாறு கோரியுள்ளார். எனினும் ஆளும் தரப்பால் இது முழுமையாக புனரமைக்க வேண்டும் என்ற பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

இதனடிப்படையில் மாநகர சபையால் சங்கிலியனின் சிலை அகற்றப்பட்டு புதிய சிலை நிறுவுவதற்கான பணிகள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

மேற்படி சிலை அகற்றப்பட்டு விட்டது என்று சில ஊடகங்களில் வெளியான தவறான செய்திக்கு மேற்படி நடவடிக்கை முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

அதேவேளை, சங்கிலி மன்னனின் வம்சாவழி வாரிசுகளில் ஒருவான இளவரசர் ரெமிஜியஸ் கனகராஜா நெதர்லாந்திலிருந்து மேற்படி சிலை புனரமைப்பு தொடர்பாக யாழ். மாநகர சபையுடன் தொடர்புகொண்டு விபரங்களைக் கேட்டு அறிந்து கொண்டுள்ளார்.

## கீரியால் நாசம்

(கோண்டாவில்)

கோண்டாவில் கிழக்குப் பகுதியைச் சேர்ந்த சி.பிறமதேவனின் வீட்டுக் கோழிப்பண்ணையில் கடந்த வியாழக்கிழமை இரவு உள்நுழைந்த கீரிப்பிள்ளை அங்கு நின்ற 55 கோழிக்குஞ்சுகளை கடித்து நாசமாக்கியது.

இதனால் பண்ணையாளருக்கு பெரும் நட்டம் ஏற்பட்டுள்ளது. (நி)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்



(யாழ்ப்பாணம்)

யாழ். பரமேஸ்வரா சந்திப் பகுதியில் நேற்றுக்காலை 9.15 மணியளவில் நடைபெற்ற மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தின் போது ஒருவர் காயமடைந்ததுடன், மோட்டார் சைக்கிள் மற்றும் மோட்டார் காரும் சேதமடைந்தது.

பலாலி சந்தியில் இலங்கை வங்கிக் கிளைக்கருகில் இவ் விபத்து நடைபெற்றது. இதில் பாலசிங்கம் கமல்ராஜ் என்பவர் காயமடைந்ததுடன், அவர் செலுத்திவந்த மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்துள்ளது.

இச்சம்பவம் குறித்து பொலிஸார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை நடத்தியதுடன், இவ்விபத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் தமக்குள் சமரசம் செய்து கொண்டதை அடுத்து பொலிஸார் அங்கிருந்து விலகிச் சென்றனர். (பா)

## வருடாந்த திருவிழா

(குருநகர்)

குருநகர் தூய கார்மேல் அன்னை ஆலயத்தின் வருடாந்த திருவிழா இன்று காலை 6.30 மணிக்கு புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியின் அதிபர் அருட்திரு மைக்கல் சவுந்தரநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

மாலை 5.15 மணிக்கு திருச்செபமாலையுடன் அன்னையின் திருச்சொருப பவனியும் இடம்பெறும். (52)



பொஸ்கோ பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக நிறுத்திவைக்கப்படும் வாகனங்களால் அவ்வீதியூடாகப் பயணிக்கும் பயணிகள் மிகுந்த அசௌகரியங்களுக்குள்ளாக்கப்படுகிறார்கள். வாகனங்கள் இவ்வாறு குறித்த பகுதியில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதையும் காணலாம். (படம்: சுமித்தி)

## ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் - (கியூடெக்) நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ். வலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட விசேட கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வுக் கூட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இவ்விசேட கல்வி ஆசிரியர்களுக்கான செயலமர்வுக் கூட்டம் இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை நடைபெறும் என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எஸ்)

## சோமாஸ்கந்தன் மலர் வெளியீடு

புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரியின் கடந்த ஆண்டுச் செயற்பாடுகளை வெளிக்காட்டும் சோமாஸ்கந்தன் மலர் நேற்று முன்தினம் காலை கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டது.

கல்லூரி அதிபர் இ.இராஜமகேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் முத்து. இராதாகிருஷ்ணன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

ஆசியுரையை புத்தூர் சிவன் தேவஸ்தானப் பிரதம குரு சாமி. சோமசுந்தரக் குருக்கள் நல்கினார். வாழ்த்துரைகளைக் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம், கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் ஆகியோர் வழங்கினர்.

நூல் வெளியீட்டுரையை ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை அதிபர் மு.முரளிதரனும் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக கணக்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் தி.வேல்நம்பியும் ஆற்றினர்.

## ஞானஸ்தான ஆராதனை

அற்புத மத்தியஸ்தானம் அசெம்பிளி ஒவ் கோட் கோண்டாவில் திருச்சபையானது தனது இவ்வாண்டுக்கான ஞானஸ்தான ஆராதனைக்காக போதகர் க.ராஜா தலைமையில் வண.சிதம்பரப்பிள்ளையுடன் இணைந்து சபையினர் நாளை காலை 8 மணிக்கு காரைநகர் கசூரினா கடற்கரைக்கு செல்லவுள்ளனர்.

அங்கு திருமுழுக்கு ஞானஸ்தானமும் ஐக்கிய விருந்துபசாரமும் இடம்பெறவுள்ளது. (நி)

## பொங்கல் விழா

(அம்பலப்பெருமாள்)

கிளிநொச்சி - வன்னேரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள முனியப்பர் ஆலய பொங்கல் விழா நேற்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

1953 ஆம் ஆண்டு வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டம் உருவாக்கப்பட்டதைத் தொடர்ந்து இக்கிராம மக்களினால் இன்று வரை கிராமிய பாரம்பரிய முறைப்படி இப்பொங்கல் விழா நடைபெற்று வருகிறது.

குஞ்சுக்குளம் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பண்டம் எடுத்து வரப்பட்டு வன்னேரிக்குளம் திக்காய்குளத்தின் கீழ் அமைந்துள்ள முனியப்பர் ஆலயத்தில் பொங்கல் விழா சிறப்பாக நடைபெற்றது. (121)


### நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ கால தற்காலிக கடைகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கான

### கேள்வி அறிவித்தல் - 2011

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவ காலத்தில் தற்காலிக கடைகள் அமைப்பதற்கான நிலையங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் 18.07.2011 - 28.07.2011 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 10.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஐஸ்கிறீம் கடைகளுக்கு மீளளிக்கக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10000/= உம் ஏனைய கடைகளுக்கு ரூபா 2000/= உம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 400/= உம் (வற் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி நீங்கலாக) செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று விண்ணப்பப் படிவத்தினை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் 18.07.2011 - 28.07.2011 ஆம் திகதி காலை 10.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பப் படிவங்கள் யாவும் ஆணையாளர், மாநகர சபை என முகவரியிடப்பட்டு இவ் அலுவலகத்தில் வைக்கப்படும் கேள்விப் பெட்டியில் 28.07.2011 ஆம் திகதி நண்பகல் 10.00 மணிக்கு முன்னர் சேர்க்கப்படல் வேண்டும்.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் யாவும் எதிர்வரும் 28.07.2011 ஆம் திகதி மு.ப 11.00 மணிக்கு முதல்வர் அலுவலகத்தில் திறக்கப்படும். சித்தி பெற்றவர் கேள்வித் தொகையினை முழுமையாகச் செலுத்தி குறிக்கப்பட்ட இடத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற நானாவித இறைவரிப் பகுதியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்வதுடன் வரைபடத்தையும் பார்வையிடலாம்.

குறிப்பு:-

1. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும் உற்சவ காலத்திற்கு மாநகர சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர, வேறு கடைகள், தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதி இன்றி திறந்து வியாபாரம் நடாத்தவும், விளம்பரங்கள், விளம்பரப் பதாகைகள் அமைப்பதற்கும் அனுமதி வழங்கப்படமாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.
2. கோவில் சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகள் வியாபார மாற்றம் செய்வதாயின் அதற்கான உரிமத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.
3. நல்லூர் உற்சவகால வியாபார அனுமதி பெற்ற வியாபாரிகள் மாத்திரம் உள்நுழைய அனுமதிக்கப்படுவார்கள். ஏனைய வியாபாரிகள் எக்காரணம் கொண்டும் உள்நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**மாநகராட்சி மன்றம், யாழ்ப்பாணம்** — **திருமதி யோகேஸ்வரி பற்குணராசா**

**13.07.2011** (C/830) **மாநகர சபை, யாழ்ப்பாணம்.**





(C/829)

### பாராட்டி வாழ்த்துகிறோம்

கடற்தொழிலை
மையப்படுத்தி அனைவரது
தேவைகளையும்
இனங்கண்டு
சேவையாற்றியதுடன்
நிறுவனத்தின்
உயர்வுக்காய் அல்லும்
பகலும் அயராது உழைத்து
சமூக சேவைக்கான
சாமஸ்ரீ தேசமான்ய விருது
பெற்ற சீநோர் நிறுவனப்
பணிப்பாளரும் மாநகர
சபை உறுப்பினருமான

**ஏ.கிளப்போடாசியஸ்**

அவர்களை பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

**தலைவர், ஊழியர்கள்
வடகடல் நிறுவனம்.**

எவனும் தனக்குத்தானே தலைவனாக இருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தன்னைத்தானே அடக்கப் பழகிக் கொண்டவன் தலைமை ஏற்கத் தகுதி உடையவனாகிறான். தலைமைப் பண்புகளுக்கு எல்லாம் அடக்கமே அடிப்படைப் பண்பாகும்.

-புத்தர்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## அறிக்கையும் நாடாவும் அரோகரா!

ஒவ்வொரு தேர்தலுக்கும் மட்டுமே தவறாமல் முழங்குகின்ற தமிழ் வீர முழக்கங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. வருத்தங்கள், துன்பங்கள், வாழ்வின் வலிகள், தேவைகள் எல்லாவற்றையும் வெறும்பேச்சு போதையிலேயே மூழ்கடித்துவிடலாம் என்ற நம்பிக்கையோடு, அதே தேர்தல்கால வசனங்கள் வண்டுகளாய் காதுக்குள் வந்து குடைகின்றன.

"எத்தனை சோதனைகள் வந்தாலும் தமிழன் சுயகௌரவத்தையும் தன்மானத்தையும் இழந்து வாழமாட்டான்" என்று மக்களைக் கொள்ளையடித்து ஒட்டாண்டிகளாக்கிவிட்டு ஒடிய ஒரு பிரமுகர் கூசாமல் முழங்குகிறார். மக்கள் இன்னும் எத்தனை எத்தனை சோதனைகளைத் தாங்கவேண்டும் என்பதையும் அவரிடம்தான் மேடை விட்டிறங்கியதும் கேட்டறிந்து கொள்ள வேண்டும். எப்போதுதான் தமிழனுக்குச் சோதனைகள் முடியும் என்பதையாவது தெரிந்துகொள்ளும் உரிமை அவனுக்கு இல்லையா?

மக்களுக்கு உணர்ச்சியூசி அடித்தல் தவிர மற்றொன்றறியாத அந்த – தமிழ் வீரத்தின் வாரிசுரிமையை மொத்தமாகக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர்களில் ஒருவரான அவர் மேலும் சொற்பெருக்குகின்றார். தந்தை செல்வா, தமிழர்களை ஆண்டவன்தான் காப்பாற்றவேண்டும் என்றாராம். அந்த ஆண்டவன் வடிவில்தான் ஐ.நா. நிபுணர்குழுவின் போர்க்குற்ற அறிக்கையும், சனல் – 4 ஒளி நாடாவும் வந்திருக்கிறதாம்!

எப்படியிருக்கிறது கதை? மக்களைக் காப்பாற்றும் எந்த வழியும் இவர்களிடம் இல்லை; கையை விரித்துக் கடவுளைக் காட்டுகிறார்கள். கதியற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்பதுபோல, 'அன்னவர்க்கே சரண் நாங்கள்' என்று ஒரு அறிக்கையிடமும் ஒளிநாடாவிடமும் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து விட்டார்கள்.

தம்மால் எதுவும் ஆகாது என்பதுணர்ந்து காலத்திற்குக் காலம் இப்படி எதன் மீதாவது குருட்டு நம்பிக்கை வைக்கச் சொல்லி மக்களை ஏமாற்றுவது இவர்களது வாடிக்கையாக இருக்கிறது. அரசாங்கம் தீர்வைத் தரவே தராது என்று அடித்துச் சொன்னாற்பிறகு, அடுத்தது என்ன? என்ற கேள்விக்கு இவர்களிடம் பதிலே இல்லை. எனவே ஏதாவது அதிசயம் நடக்குமென்று அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கச் சொல்வதைத் தவிர வேறு எந்தத் திட்டமுமில்லை. இவர்கள் எப்படித் தங்களைத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக்கொள்கிறார்கள்? ஆச்சரியம்தான்!

சனல் – 4 ஒளிநாடாவோ, போர்க்குற்ற அறிக்கையோ தமிழ் மக்களுக்கு எவ்வாறு தீர்வைத் தரப்போகின்றன? ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து இந்த நாட்டின் அறுதிப் பெரும்பான்மை மக்கள் அவற்றுக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் நிலையில், அவற்றைக் கடவுளாய்க் கும்பிட்டு நாம் காணப்போவதென்ன? அறிக்கையும் நாடாவும்தான் நம்மைக் காப்பாற்றப் போகிறது என்று காற்றில் கயிறு திரித்துக்கொண்டிருப்பவர்களையா நாம் தலைவர்கள் என்று நம்பிக்கொண்டிருப்பது?

மேடை முழக்கங்கள் இன்னுமிருக்கிறது. "இவர்கள் யார் பாதை திறக்க? இவர்கள் யார் கட்டடங்களுக்கும் பாலங்களுக்கும் அடிக்கல் நாட்ட? இவர்கள் யார் நிவாரணம் வழங்க?" என்றும் கூட தேர்தலுக்காக உணர்ச்சி வெறியைக் கிளப்பும் பேச்சுப் பேசுகிறார்கள். "என் ஆளு மேலே கையை வைச்சுப் பார் தெரியும்..." என்று உதார் விட்டபடியே தன் ஆளுக்கு அடி வாங்கிக்கொடுப்பாரே வடிவேல்... அது மாதிரித்தான் இவர்களும், மக்கள் மேலும் மேலும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்கள்.

மக்களின் கஷ்டங்களை வைத்து அரசியல் செய்யச் சும்மா பேச்சுப் பேசுவதே இவர்களது வாக்குகள் அள்ளும் உத்தியாக இப்போதும் தொடர்கிறது.

மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப்போகிறது என்றால்தான் அதைக் குழப்ப சுயகௌரவம், தன்மானம், உயிர்துச்சம் என்றெல்லாம் உணர்ச்சிகரமாகப் பேசி அவர்களை ஏமாற்றுகிறார்கள். அதாவது வியாபாரச் சலுகைகள், கட்டுமான ஒப்பந்தங்கள், சொந்தபந்தங்களுக்கு வேலைகள், மேற்படிப்புச் சலுகைகள் என்றால்... பின்கதவால் சென்று குழைந்து சிரித்து வேண்டிப் பெறும போதெல்லாம் தமிழனின் தன்மானமும் கௌரவமும் இவர்களுக்கு ஞாபகமே இருப்பதில்லை.

மக்களுக்கு ஏய்ப்பும் மச்சினிக்கு வாய்ப்பும் என்று இன்னும் எத்தனை காலம் இவர்கள் நாடகமாடுவர்? உணர்ச்சிகரப் பேச்சோடு மக்களை உயிர் காயவிடும் அரசியலுக்குத் திரை விழுவது எப்போ?

- ஆசிரியர் -

# போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு சிறப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்

## கிளிநொச்சியில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவிப்பு

(கிளிநொச்சி)

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் அபிவிருத்தியைத் துரிதகதியில் முன்னெடுப்பதோடு போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு சிறப்புக் கொடுப்பனவுகளை வழங்கி அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கிளிநொச்சி பொதுச சந்தை வர்த்தகர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

போரினால் பாதிக்கப்பட்ட விதவைகளுக்கு மாதாந்தம் இரண்டாயிரம் ரூபாவை உதவித் தொகையாகக் கொடுப்பதோடு வயோதிபர்களுக்குச் சிறப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

இதுவரை காலமும் போர் நடவடிக்கையினால் இப்பிரதேசத்தின் அபிவிருத்தியை மேம்படுத்த முடியாதிருந்தது. தற்போது இப்பிரதேசத்தின் அபிவிருத்தி தொடர்பாக அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது.

இந்நிகழ்வில் அமைச்சர் மற்றும் சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் கீதாஞ்சலி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (28)

## மல்லாவியில் அமைக்கப்படுகின்றது சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் பிரதேச செயலகப் பிரிவில் புதிதாக சித்த ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

72 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் மேற்படி வைத்தியசாலையின் கட்டட வேலைகளை முல்லைத்தீவு மாவட்ட கட்டடத் திணைக்களத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

இவ்வைத்தியசாலை அமைக்கப்படுவதால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் ஆயுள்வேத வைத்திய சிகிச்சைகளை மேற்கொள்ள முடியும். அத்துடன் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வந்த நிலையில் இவ்வைத்தியசாலை அமைக்கப்பட்டுள்ளதால் அவசர சிகிச்சையைப் பெற்றுக்கொள்வதற்கு நன்மையாக அமைந்துள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (121)

## அணைக்கட்டு புனரமைப்பு வேலைகள் இன்று ஆரம்பம்

(யாழ்.நகர்)

காரைநகர் கிழக்கு கடற்கரை உவர்நீர்த் தடுப்பு அணைக்கட்டான வேணன் அணைக்கட்டு புனரமைப்பு வேலைகள் இன்று ஆரம்பித்துவைக்கப் படவுள்ளது.

5.5 கிலோமீற்றர் நீளமான இவ் உவர்நீர் தடுப்பு அணை 32 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளதுடன் இதற்கான புனரமைப்பு வேலைகளைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

ஊரிக் கிராமத்திலுள்ள முருகன் கோயில் வீதியின் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப் படவுள்ளன.

இந்நிகழ்வுகளில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா உட்பட மற்றும் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (10)

# எரிபொருள் விற்பனை நிலையம் இறம்பைக்குளத்தில் திறக்கப்பட்டது

(வவுனியா)

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தனியாருக்கு உரித்தான எரிபொருள் விற்பனை நிலையம் ஒன்று நேற்றுக் காலை வவுனியா இறம்பைக்குளத்தில் கனியவள, பெற்றோலியவளத் துறை அமைச்சரும், ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலாளருமான சுசில் பிறேம ஜயந்தவினால் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்ட வவுனியா நகரசபையின் புதிய தலைவராக பதவி ஏற்றுள்ள ஐ.கனகையாவுக்கு அமைச்சர் கைலாகு கொடுத்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டார்.

பிரதி அமைச்சர் சரணகுணவர்த்தனா, வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.சுமதிபாலா, முன்னாள் நகர பிதா ஜி.ரி.லிங்கநாதன், பெற்றோலிய கூட்டுத்தாபன சிரேஷட உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் இந்த வைபவத்தில் கலந்து சிறப்பித்தனர்.

தேசியக்கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதத்துடன் வைபவம் ஆரம்பமானது. அமைச்சர் முதல் வாகனத்திற்கு எரிபொருளை வழங்கினார். வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கே ஏழு இடங்களில். எரிபொருள் விற்பனை நிலையங்கள் திறக்கப்படவுள்ளது எனப் பெற்றோலிய வள அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்தேசிய கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடைய முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# சட்டவிரோத உடன்படிக்கையின் மூலம் சீன நிறுவனத்திற்கு காணி விற்றது ஏன்?

## கேள்வி எழுப்புகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

சட்டவிரோத உடன்படிக்கை ஒன்றின் மூலம் அரசு எவ்வாறு காலி முகத்திடல் பகுதியில் 10 ஏக்கர் நிலபரப்பினை சீன அமைப்புக்கு விற்பனை செய்தது என ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரஷ டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி யெழுப்பியுள்ளார்.

மேலும், அரசு இவ்வாறு 20 ஏக்கர் நிலப்பரப்பினை காலி முகத்திடல் பகுதியில் விற்பனை செய்வதற்கு தீர்மானித்து அவற்றில் 10 ஏக்கர் நிலப்பரப்பினை ஷங்கரி லா நிறுவனத்துக்கு விற்றமை தொடர்பில் எதுவித பிரச்சினைகளும் இல்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஷங்கரி லா நிறுவனத்தினதும் கத்திக்நிறுவனத்துனடைய கொடுப்பனவுகள் ஒரே நேரத்தில் இடம்பெற்றதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்ததில் எதுவித உண்மைகளும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நிதி அமைச்சுக்கும் கத்திக் நிறுவனத்துக்கும் இடையில் பெப்ரவரி 15 திகதி கையொப்பம் இடப்பட்ட உடன்படிக்கையில் காலி முகத்திடல் நிலப் பரப்பில் 10 ஏக்கர் நில விற்பனை கொடுப்பனவுக் கான முற்பணம் 50 மில்லியன் டொலர் பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முதல் வழங்கப்பட வேண்டும் எனவும் மிகுதி 86 மில்லியன் டொலர்கள் ஏப்ரல் 21ஆம் திகதிக்கு முன்னர் வங்கியில் வைப்பிலிட்டு உறுதி வழங்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.



இந்நிலையில், அவ்வாறு குறித்த திகதியில் கொடுப்பனவுகளை கொடுக்கத் தவறினால் உரிமத்தை மீளப்பெற்று ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும், இது தொடர்பாக ஜூன் 22ஆம் திகதி பிரதி அமைச்சர் லகஷ்மன் யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றத்தில் சமர்பித்த ஆவணத்தில் 54.4 மில்லியன் டொலர்களே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டதாக அவர் கூறினார்.

எப்படியிருப்பினும் ஒப்பந்தத்தை மீறிச்செயற்படும் குறித்த சீன நிறுவனத்துக்கு எவ்வாறு 10 ஏக்கர் நிலத்தினை விற்க முடியும் என ஹரஷ டி சில்வா கேள்வியெழுப்பியுள்ளார்.

# வலிமை இழப்புக்குள்ளானவர்கள் தேர்தலில் வாக்களிக்க ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபை தேர்தலில் வலிமையிழப்பொன்றுக்கு உள்ளான வர்களும் வாக்களிப்பதற்கான வசதிகள் ஏற் படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆ.சு. கருணாநிதி அறிவித்துள்ளார்.

இது தொடர்பான அறிவுறுத்தல்கள் பிரதேச செயலர்கள் ஊடாக கிராம அலுவலர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன்படி வலிமையிழப் பொன்றுக்கு உள்ளான ஒருவர் உதவியாளர் ஒரு வருடன் வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இது சம்பந்தமான விண்ணப்பப் படிவங்கள் கிராம அலுவலர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. வலிமையிழப்புக்குள்ளானவர்கள் அதனைப் பூரணப்படுத்தி உறுதிப்படுத்தல்களை மேற் கொள்ள வேண்டும். இந்த விண்ணப்பங்கள் வலிமை யிழப்புக்குள்ளான வாக்காளரினால் பூரணப்படுத் தப்பட்டு கிராம அலுவலரினால் உறுதிப்படுத்தப் படுவதுடன் சிரேஷ்ட மருத்துவ அதிகாரிகளினால் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

குறிப்பிட்ட வாக்காளருடன் வரும் உதவியாளர் கள் 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், தேர்தல் அபேட்சகராக இல்லாதவராகவும், தேர்தல் அலுவ லராகவோ, வாக்கெடுப்பு உரிமை இழந்தவ ராகவோ இல்லாது இருத்தல் வேண்டும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (பா)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர ஈச்ச மோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான கரவருஷ 2011 ஆம் ஆண்டுக் கான அலங்கார உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்ப மாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

15 நாட்களுக்கு நடை பெறும் மேற்படி அலங்கார உற்சவத்தின் இறுதி நாளான எதிர்வரும் 27ஆம் திகதி திருமஞ்சத்தில் சாமுண்டீஸ் வரி சமேதராக ஞானவைர வர் பெருமான் வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலிப்பார். (42)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். கொட்டடி நமசி வாய வித்தியாலயத்தின் 2009, 2010ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா அண்மை யில் வித்தியாலய நடராஜா அரங்கில் பாடசாலை அதிபர் ப. கணேசன் தலை மையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக இவ்வித்தி யாலய முன்னாள் அதிபரும் தற்போதைய ஊர்காவற் றுறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான தி. சோம சேகரமும், சிறப்பு விருந்தின ராக யாழ்ப்பாணக் கோட்டக் கல்விப் பணிப்பாளரான திருமதி வ. சிவபாலனும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மேற்படி விழாவின் கலை நிகழ்வில் வலய மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்ற மாணவர்களின் காத்தவரா யன் கூத்து இடம்பெற்றது. இக்கூத்து பார்வையாளர் களின் பாராட்டைப் பெற் றுக்கொண்டமை குறிப்பிடத் தக்கது.





தெல்லிப்பளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அபிவிருத்தி வேலைகளின் ஆரம்ப நிகழ்வில் தெல்லிப்பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கு வழங்கவென வைக்கப்பட்டுள்ள விவசாய உபகரணங்களையும், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ பயனாளி ஒருவருக்கு நீர் இறைக்கும் இயந்திரத்தை வழங்குவதையும் காணலாம்.

# காரைநகரில் அபிவிருத்திப் பணிகள் அமைச்சர் டக்ளஸால் முன்னெடுப்பு

(காரைநகர்)

காரைநகர் பகுதி மக்களுக்கான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்து வதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

காரைநகரில் நீண்ட காலமாக நிலவி வரும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக நீர் விநியோகக் குழாய்கள், கிணறுகள் என்பவற்றைத் திருத்தி அமைப்பதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மின்சாரம் கிடைக்காத தோப்புக்காடு, மருதபுரம், ஊரி மற்றும் பின்தங் கிய கிராம மக்களுக்கான மின்சாரம் வழங்குவ தற்கான முன் நடவடிக்கையாக மின்கம்பங்கள் கொண்டு வரப்பட்டு வேலைகளுக்கான ஏற்பாடு களும் செய்யப்பட்டுள்ளன.

காரைநகர் மருதபுர மக்களின் கோரிக்கைக்கு இணங்க பாடசாலை பஸ் சேவை ஒன்று நடத் தப்பட்டவுள்ளதுடன் பல்வேறு உதவித் திட்டங் களும் வழங்கப்படவுள்ளன.

பொது இடங்களில் 10 மலசல கூடங்களை அமைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன. இப்பகுதியில் பல வீதிகளைத் திருத்துவதற் கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றது.

காரைநகர் சமயபுல பகுதியில் வாழ்ந்து வரும் 53 குடும்பங்களுக்கு வீடு அமைப்பதற்கான நிதியாக முதல் கட்டமாக ஐம்பதாயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி யின் காரியாலயம் 1991ஆம் ஆண்டு காரைநக ரில் நிறுவப்பட்டு தொடர்ந்து இப்பகுதி மக்களுக்கு சேவையாற்றி வருவது குறிப்பிடதக்கது. (50)

# தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் திருக்குறள் மாநாடு

(யாழ். நிருபர்)

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தினால் எதிர்வரும் 22,23,24ஆம் திகதி களில் மூன்று தினங்களுக்குத் திருக்குறள் மாநாடு விமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது.

22ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஊர்வ லத்துடன் ஆரம்பமாகும் இந்நிகழ்வு, கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவர் மு.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

திருக்குறளில் இறைநெறி என்னும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் அரங்க இராமலிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். அன்றைய தினம் மாநாட்டு சிறப்பு மலரான முப்பால் வெளியீடு இடம்பெறவுள்ளது.

வைத்திய கலாநிதி ஜின்னாஹ் ஷரிழத்தீன் வெளியீட்டுரை நிகழ்த்துவார். நூலின் முதற் பிரதியை திருமதி ஜெயநிதி வினோதன் பெற்றுக்கொள்வார். கலாசூரி வாசுகி ஜெயதீஸ்வரனின் நாட்டியாலயத்தின் மந்திர் மாணவிகளின் 'திருக்குறள் பரதம்' நடன நிகழ்வும் இடம்பெறும். தொடர்ந்து இரண்டு நாள் விழா காலை மாலை நிகழ்வுகளாக நடைபெறவுள்ளது. (10)

# துப்புரவு செய்யப்படாத நிலையில் கால்நடைகளுக்கான கேணிகள்

(ஊர்காவற்றுறை)

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள கால்நடைகளுக்கான கேணிகள் கடந்த மூன்று வருடங்களுக்கு மேல் துப்புரவு செய்யப்படா மலும், சேறும், சகதியுமாய் இருப்பதாக நெடுந்தீவு கால் நடை வளர்ப்போர் குற்றம் சுமத்துகின்றனர்.

நெடுந்தீவுப் பகுதியில் கால் நடைகளான குதிரைகள், மாடு கள் காட்டுப்பகுதியில் கோடைக் காலத்தில் நீர் அருந்துவதற்கு கட்டப்பட்ட இக்கேணிகளே துப் புரவு செய்யப்படாமல் உள்ளது.

இதனால், கால்நடைகள் நீர் தேடி அலைவதாகவும், வேல ணைப் பகுதியில் கடும் வரட்சி யால் நீர் இன்றி குதிரைகள் கடல் நீரை குடித்து இறப்பதாக வும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி கேணிகளை மிக விரைவாக புனரமைத்து கால் நடைகளுக்கு நீர் அருந்துவதற் கான நடவடிக்கையினை சம்பந் தப்பட்ட பிரதேச சபை நிர்வாகி கள் மேற்கொள்ள வேண்டும் எனக் கால்நடை வளர்ப்போர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(27)

# இணுவில் மத்திய கல்லூரியில் மாவை மான்மியம் வெளியீடு

சின்னத்துரை உமாபாலனின் மாவை மான்மியம் நூல் வெளி யீட்டு விழாவும், புலவர் ம. பார்வதி நாதசிவத்தின் புவள விழாவும் இன்று பிற்பகல் 3.00 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இடம்பெறும்.

தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு. திரு முருகன் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை பண்டிதர் ந. கடம்பேஸ்வரன் நிகழ்த்துவார். கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியின் ஓய்வுபெற்ற விரி வுரையாளர் கலாநிதி செ. திரு நாவுக்கரசு மதிப்பீட்டுரை வழங்கு வார். நூலின் முதற் பிரதியை த. விநாயகமூர்த்தி வெளியீட்டு வைக்க கொமர்ஷல் வங்கியின் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கா. கணேசமூர்த்தி பெற்றுக் கொள்வார். நூலாசிரியரின் ஏற் புரையும் இடம்பெறும். இந்நிகழ் வில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா பாராட்டுரை வழங்குவார். (44)

# மீளவும் இயங்க ஆரம்பித்தது ஈச்சமோட்டை சனசமூக நிலையம்

(யாழ்ப்பாணம்)

நிர்வாக சீர்கோட்டால் இயங்காமல் இருந்த ஈச்சமோட்டை சனசமூக நிலையம் யாழ். மாநகர சபை ஆணையாளர் எடுத்த முயற்சியின் பயனால் மீளவும் இயங்க ஆரம்பித்துள்ளது.

யாழ். மாநகர ஆணையாளரால் கடந்த வாரம் கூட்டப்பட்ட கூட்டத்தில் ஒன்பது பேர் கொண்ட இடைக்கால நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு மீளவும் இயங்க வைக்கப்பட்டுள்ளது.

இவ் இடைக்கால சபையின் ஏற்பாட்டில் இடைக்கால நிர்வாக சபை உறுப்பினர் ஒருவரின் நிதி உதவியுடன் நிலையம் மீளவும் புனருத்தாரணம் செய்யப்பட்டு வர்ணம் பூசப்பட்டு தளபாட வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் பத்திரிகைகளும் இடப்பட்டுள்ளன.

தூர இடங்களில் சென்று பத்திரிகைச் செய்திகளை அறிந்து கொள்ளச் சென்ற கிராமத்துப் பெரியவர்கள், இதன் காரணமாக மகிழ்ச்சி அடைந்ததமை குறிப்பிடத்க்கது. (42)

## ஈஞ்சடி ஞானவைரவர் சப்பற வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

சுதுமலை ஈஞ்சடி ஞான வைரவர் திருக்கோவிலின் சப்பற வெள்ளோட்ட விழா வும் சப்பறத் திருவிழாவும் இன்று இடம்பெறுகின்றது.

நண்பகல் 12.00 மணிக்கு வெள்ளோட்டமும் இரவு 8.00 மணிக்கு சப்பறத் திருவிழா வும் இடம்பெறும். (44)

## புனரமைப்பு ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

125 ஆண்டுகளுக்கு மேற் பட்ட பழமை வாய்ந்த மண் டைதீவு சென் பீற்றர் தேவால யம் புனரமைப்புச் செய்யும் பணிகள் தற்சமயம் நடை பெற்று வருகின்றது.

அவ்வூர் கிறிஸ்தவ மக்க ளினால் இவ் ஆயலம் புனர மைக்கப்பட்டு வருகின்றது. சுமார் 17 இலட்சம் ரூபா செல வில் குறித்த ஆலயத்திற்கு கூரைத் தகடுகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வரு கின்றது. (பா)

# போக்குவரத்துச் சேவையை விஸ்தரிக்கக் கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ, கைதடி நாவற்குழி, தனங்கிளப்பு பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில், சீரான போக்குவரத்து வசதிகள் இல்லாமல் தாம் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

முன்னர் இடம்பெற்ற 809 ஆம் இலக்க பஸ் சேவை கோவிலாக்கண்டி துறைமுகத்துடன் தனது சேவையை நிறுத்தியுள்ளது.

இதைவிட 805 ஆம் இலக்க பஸ் சேவையும் இடம்பெயர்வுக்கு முன்னர் இருந்த வழித்தடத்திலிருந்து ஆரம்பிப்பதில்லை. இவ்வாறான நிலையினால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் அன்றாட தேவைகளை மேற்கொள்வதற்கு பெரும் சிரமப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எனவே, இவ்விடையம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுத்து 805 ஆம் இலக்க பஸ்சேவையை இடம்பெயர்வுக்கு முன்னர் இயங்கிய வழித்தடத்தில் இருந்து தனது சேவையை ஆரம்பிப்பதற்கும், 809 ஆம் இலக்க பஸ் தனங்கிளப்புச் சந்தி வரை தனது சேவையை நீடிப்பதற்கும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மறவன்புலோ கிராம அபிவிருத்தி சங்கத்தினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.



யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய மாணவர்கள் 500பேருக்கு வங்கி கணக்குகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ். மநகரசபை உறுப்பினருமான அ.விஜயகாந்த் மாணவி ஒருவருக்கு வங்கிப் புத்தகத்தை வழங்குவதை காணலாம்.

# உள்ளூராட்சி தேர்தல் கடமைகளில் இருநூறு வெளிமாவட்ட அலுவலர்கள்

## - யாழ். உதவித்தேர்தல்கள் ஆணையாளர் . தகவல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் கடமையாற்றுவதற்கென்று வெளிமாவட்டங்களிலிருந்து 200 அலுவலர்களின் பெயர்கள் இது வரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆ.சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இத் தேர்தலின் போது இனங்காணப்பட்ட ஒரு சில வாக்களிப்பு நிலையங்களிலும், வாக்கு எண்ணும் நிலையங்களிலும் கடமையாற்றுவதற்கென்று வெளிமாவட்டத்தைச் சேர்ந்த தமிழ், சிங்கள, முஸ்லிம் அலுவலர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக தேர்தல் திணைக்களத்தி லிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படி வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 200 அலுவலர்களின் பெயர்கள் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் தவிர மேலும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த அலுவலர்கள் கடமைக்கு அழைக்கப்படலாம். ஆயினும் அவர்களது பெயர் விபரங்கள் இன்னமும் அனுப்பி வைக்கப் பட வில்லை. எனினும் 21ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு முன்னர் இவர்கள் யாழ். உதவித்தேர்தல்கள் அலுவலகத தில் சமுகமளிப்பார்கள்.

இது தவிர உள்ளூராட்சி சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் 35 சாதாரண வாக்கு எண்ணும் நிலையங்களும் 10 தபால் மூலவாக்களிப்பு எண்ணும் நிலையங்களும், கிளிநொச்சியில் 6 சாதாரண வாக்கு எண்ணும் நிலையங்களும் 1 தபால் மூலவாக்கு எண்ணும் நிலையமும் அமைக்கப்படவுள்ளது.

தேர்தலின் போது யாழ். மாவட்டம் 54 வலயங்களாகவும், கிளிநொச்சி மாவட்டம் 12 வலயங்களாகவும் பிரிக்கப் பட்டுள்ளன இவ்வாறு பிரிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வலயங்களுக்கும் தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கென்று வலய உதவி தெரிவத்தாட்சி அலுவலர்கள் நியமிக்கப்படுவார்கள். என்றார். (பா)

# கிராம அபிவிருத்திச் சங்க பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வசாவிளான் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டமும், வசாவிளான் ஞானவைரவர் ஆலய விசேட பொதுக கூட்டமும் எதிர்வரும் 28ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

வசாவிளான் மத்திய மகாவித்தியாலய வகுப்பறை மண்டபத்தில் மூ. விநாயக மூர்த்தி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க. கமலேந்திரன், பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பளை பிரதேச செயலர் சு. முரளிதரன், தெல்லிப்பளை கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.யூட், வசாவிளான் மேற்கு ஜே/245 கிராம அலுவலர் எஸ். அனுரதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்திற்கு வசாவிளான் மேற்கு ஜே/245 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர் அறிவித்துள்ளார்.

# அம்பலப்பெருமாள்குளம் கிராமம் 72 மில்லியன் செலவில் அபிவிருத்தி

(அம்பலப்பெருமாள்)

துணுக்காய் அம்பலப்பெருமாள் குளம் கிராமத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 72 மில்லியன் ரூபா செலவில் கிராம அபிவிருத்தி, வாழ்வாதார செயற்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன்பிரகாரம் அம்பலப்பெருமாள் குளம் 56 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப் படவுள்ளது. இதேபோல சிறிய குளமாகிய அம்பலவன் சின்னக்குளமும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இதை விட மேற்படி பிரதேசத்தின் முதன்மை வீதியாக கிலோ மீற்றர்தூரம் வரையான வீதிகற்கள் போடப்பட்டு புனரமைக்கப்பட்வருகிறது.

மேலும் சிறியவீதிகளும், பொதுநோக்குமண்டபமும் புனரமைக்கப்பட்டு வருவதுடன் வாழ்வாதார உதவிகளும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(121)

# மானிப்பாய் பிரதான வீதியின் மின்விளக்குகள் ஒளிர்கின்றன

(யாழ்ப்பாணம்)

நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக மானிப்பாய் பிரதான வீதிக்கு வீதி விளக்குகள் பொருத்தப்பட்டு நேற்றுமுன்தினம் அவ் விளக்குகள் உத்தியோகபூர்வமாக ஒளிரவிடப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக இருளில் மூழ்கி கிடந்த மானிப்பாய் பிரதான வீதியினால் தாம் பல்வேறு சிரமங்களை சந்தித்து வருவதாகவும் அதற்கு வீதி விளக்குகளைப் பொருத்தி தருமாறு பிரதேச மக்கள் அப்பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்தனர்.

இந்நிகழ்வில் மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் வலிகாமம் பிரதேச ஈ.பி.டி.பி.யின் இணைப்பாளர் ஜீவன், மானிப்பாய் பிரதேச இணைப்பாளர் ஜீவா மற்றும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## ஸ்ரீதரின் இன்றைய பலன்

(16.07.2011 – சனிக்கிழமை)

### பஞ்சாங்கக் குறிப்புக்கள்

கர வருஷம்
ஆனி 31 ஆம் நாள்.
இராகுகாலம் 9.00–10.30, சுபநேரம் 3.00 –4.30,
நட்சத்திரம் உத்தராடம் மு.ப. 10.29 வரை
திதி: பிரதமை பி.ப. 12.41 வரை

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– பண வரவு, தொழிலில் விருத்தி, தேக சுகக்குறைவு, வைத்தியச் செலவு, தெய்வ தரிசனம்.

ரிஷபம:– தேக ஆரோக்கியம், பணக் கஷ்டம், திடீர் பயணம், கடன் தொல்லை, நண்பர் வருகை.

மிதுனம் :– வைத்தியச் செலவு, பண வரவு, கடன் தொல்லை, தொழில்லாபம், தெருவிபத்து

கடகம்:– பணக் கஷ்டம், தேக சுகக்குறைவு, நண்பர் வருகை, வைத்தியச் செலவு, தொழிலில் லாபம்.

சிம்மம்:– கடன் தொல்லை, பணவரவு, திடீர் பயணம், குடும்பத்தில் மகிழ்ச்சி, நண்பர் வருகை.

கன்னி :– நண்பர் வருகை, கடன் தொல்லை, பணக்கஷ்டம், உடம்பு சுகக்குறைவு, மருத்துவச் செலவு.

துலாம் :– குடும்பத்தில் சலனம், மனக்கவலை, பணக்கஷ்டம்,தொழிலில் நஷ்டம், உடம்பு சுகக்குறைவு.

விருச்சிகம்:–பண வரவு, குடும்பத்தில் மகிழ்ச்சி, திடீர் பயணம், தேக ஆரோக்கியம், தொழிலில் லாபம்.

தனுசு:– பணக்கஷ்டம், தொழில் நஷ்டம்,காரியத்தடை உடல் சுகக்குறைவு, மருத்துவச் செலவு.

மகரம்:– தொழில் விருத்தி, பணவரவு, காரியசித்தி,குடும்பத்தில் மகிழ்ச்சி, மூத்தோர் ஆசி.

கும்பம் :– திடீர்பயணம், பணக்கஷ்டம், தொழில் நஷ்டம்,உடம்பு சுகக்குறைவு, வைத்தியச் செலவு.

மீனம்:– தொழிலில் நஷ்டம், பணக் கஷ்டம், உடம்பு சுகக்குறைவு, நண்பர் தொல்லை, குடும்பத்தில் கவலை.

---

நாட்டில ஆணும், பெண்ணும் சமமாகத்தான் வாழவேணும். ஆனா அப்புடியே நடக்குது?

தராசைப் போல சமனாக நில்லாமல் அதே தராசு ஒரு பக்கம் படிபோட்டால் ஏறிஇறங்கிக் காணப்படுவதுபோல ஆணும், பெண்ணும் மேலும் கீழுமாகத்தான் கிடக்குதுகள்.

நானென்ன சொல்ல வாறனெண்டா ஒருகாலம் ஆண்கள் கல்வி, உத்தியோகம் இன்னோரன்ன சகலதிலும் எழுப்பமாத்தான் இருந்தவை.

இப்ப அப்புடியே இல்ல பெண்கள் தான் இண்டைக்கு அந்த இடங்களில முதன்மையா எழும்பீட்டினம்.

என்ர கண் பட்டிடக்கூடாது உந்தப் பெண் புரசுகளில அதுகள் இண்டைக்கு எதில எடுத்துக் கொண்டாலும் முதலிலதான்.

கணினித் தொழில்நுட்பத்திலோ மருத்துவம், விஞ்ஞானம் சகலதிலும் இண்டைக்குப் பொம்புளையள் முன்னாலெண்டால் புழுகில்லைப் பாருங்கோ!

ஆனா ஒரு குறை ஆரும் ஏதும் சொட்டை நொட்டை சொல்லிப் போட்டாப் போதும். உந்தத் தொட்டாச் சுருங்கியைப்போல வாடிப் போறது, பின்னடிக்கிற குணங்கள் தான் மாறேல்ல.

பெண்மை,பெண்மைதான் அதுதானே அதின்ர குணம். என்னண்டா யாழ்ப்பாணத்தில ஒரு குருவானவரிட்டை சில பெண் பிள்ளைகள் முறைப்பாடொன்றை தெரிவித்து இருக்கினம்.

கலைத்துறையில இண்டைக்கு ஆம்புளையளைவிட பெண்டுகள் முன்னேற்றம். நாடகம், நடனம் போன்ற நிகழ்ச்சிகளில பொம்புளைப் புள்ளையள் கலந்து போட்டு றோட்டால வந்தால் சந்தியள்ல நிக்கிற வாலுகள் அதுகளுக்கு நக்கல், நளினம் விடுகுதுகலாம்.

றோஷீன்ர டான்ஸ் சூப்பர், ஐஸ்வரியா பிச்சை வாங்க வேண்டும். ஏன் ஹோமான்ர பாட்டு சுசீலா என்ன சின்னக்குயில் சித்ராவும் கிட்ட நிக்கேலாது.

அதைவிட நஞ்சீன்ர நடிப்புக்கு நிகர் ஆரிருக்கினம் சாவித்திரி பத்மினியெல்லாம் அவளின்ர கால் தூசுகள்.

இந்த மாதிரி கிண்டல் செய்வதாக அந்தக் குருவானவரிடம் சொல்லி பொம்புளைப் புள்ளையள் வேதனைப் பட்டுதுகள். எண்டது மட்டுமே எனிமேல் தாங்கள் இந்த நிகழ்வுகளில பங்கு பற்றமாட்டமெண்டும் சொல்லிப் போட்டுதுகள்.


பாரம்பரிய தமிழரின் கலைவடிவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக அற்று வருகிறதெண்டு ஒரு பக்கம் குரலெழுப்புவதைக் கேக்கிறம்.

உப்புடியும் அங்கனேக்க ஒண்டுரெண்டு புள்ளையள் உந்தக் கலையள்ல ஈடுபட்டுக் கொண்டிருக்கிறதேம் உப்புடி றோட்டு வழிய வைச்சுக் குழப்பினா நடிக்கவோ, ஆடவோ, பாடவோ அதுகள் வருங்களே.

ஒரு காலத்தில பொம்புளையளை எடுக்க முடியாமல் ஆம்புளையள் பொம்புளையளாக நடிச்சதேம், ஆடினதேம், பாடினதேம் மறந்திடக்கூடாது பாருங்கோ!



# கிரிடா சக்தி பயிற்சி முகாம் கிளிநொச்சியில் ஆரம்பமானது



(வவுனியா)

திறன்மிகு வீரர்களை தெரிவுசெய்து அவர்களை தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் போட்டிகளில் பங்குபற்றச்செய்யும் வகையில் நாடளாவிய ரீதியில் நடைபெற்று வரும் கிரிடா சக்தி விளையாட்டு பயிற்சி முகாம் நேற்று காலை கிளிநொச்சி பொது மைதானத்தில் சிறப்பாக ஆரம்பமாகியது.

இந்நிகழ்வை விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே, நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவர் முருகேசு சந்திரகுமார், அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் றொஹான் ரத்வத்த ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.

நேற்றுத் தொடங்கிய இப்பயிற்சி இன்றும் நடைபெறவுள்ளது. ஒவ்வொரு விளையாட்டுகளிலும் நிபுணத்துவம் வாய்ந்த சிறப்பு பயிற்றுவிப்பாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டு தெரிவு செய்யப்படும் திறன் மிகு வீரர்கள் தேசிய ரீதியிலான பயிற்சிக்கு அழைத்துச்செல்லப்படுவதோடு அவர்களுக்கு ஊக்குவிப்பு தொகையாக மாதாந்தம் ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் விளையாட்டுத்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் ரஞ்சனி ஜெயக்கொடி, வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அண்ணாத்துரை, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சீரணிவாசன், விளையாட்டு உத்தியோகத்தர்கள், விளையாட்டு வீரர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (29)

## விளையாட்டுச் செய்திகள்

### யோகமயிலினி சாதனை

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டிகளில் மூன்று தங்கப்பதக்கங்களை வென்று வடமராட்சி வடஇந்து மகளிர் கல்லூரி மாணவி வேலுமயிலு யோகமயிலினி தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளார்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற தடகளப் போட்டிகளில் 17 வயதுடையவர்களுக்கான பிரிவில் பங்குபற்றிய இவர் 100 மீற்றர் ஓட்டம், நீளம் பாய்தல், முப்பாய்ச்சல் போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார். இவ்வீராங்கனை முப்பாய்ச்சல் போட்டியில் 17 வயதுப் பிரிவில் வடமாகாண சாதனையை முறியடித்து 10.36 மீற்றர் தூரம் பாய்ந்து சாதனை நாட்டியுள்ளார்.

# கோலாலம்பூர் அணியுடனான போட்டியில் சென். பற்றிக்ஸ் வீரர் எரிக் பிரதாப் ஹட்ரிக்

(யாழ்ப்பாணம்)

மலேசியா கோலாலம்பூர் அணிக்கெதிரான போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் எரிக் பிரதாப் ஹட்ரிக் சாதனை படைத்தார்.


இலங்கை சீனிகம விளையாட்டு நல்லுறவுக்கான நிறுவனத்தால் நடாத்தப்பட்டுவரும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான 40 ஓவர்கள் கொண்ட போட்டியிலேயே எரிக் பிரதாப் இச்சாதனையை நிலைநாட்டினார்.

கிக்கடுவ ஸ்ரீ சுமங்கல லோர்ஜ் மைதானத்தில் இப்போட்டி நடைபெற்றது.

இதில் எரிக் பிரதாப் வீசிய மூன்றாவது ஓவரின் முதல் மூன்று பந்துகளுக்கும் விக்கெட்டை நேரடியாகச் சரித்தே ஹட்ரிக் சாதனை நிகழ்த்தினார்.

வெளிநாட்டு அணியொன்றுக்கு எதிராக யாழ். மாவட்ட பாடசாலை வீரர் ஒவருவர் இவ்வாறு ஹட்ரிக் நிகழ்த்தியிருப்பது சென் பற்றிக்ஸ் பாடசாலை வராற்றில் முதல் சந்தர்ப்பமாகும்.

இதேவேளை, இப்போட்டியில் முதலில் ஆடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 36.2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நோபோட் 33, அஜித் டார்வின் 23, ஜெகான் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பவஸ்சிங் 33 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.



பதிலுக்கு ஆடிய மலேசிய கோலாலம்பூர் அணி 35.4 ஓவர்கள் நிறைவில் 159 ஓட்டங்களைப் பெற்று வெற்றியிலக்கை அடைந்தது. இதில் சித்தாத் ஆட்டமிழக்காது 68 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணை புரிந்தார். பந்து வீச்சில் எரிக் பிரதாப் ஹட்ரிக்குடன் நான்கு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இத்தொடரில் இங்கிலாந்தின் மூன்று அணிகளும், மலேசியா, சிங்கப்பூர் நாடுகளின் ஒரு அணிகளுடன் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரியை 66 ஓட்டங்களால் வென்றது ஹாட்லி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் வடமராட்சி ஹாட்லிக் கல்லூரி அணி 66 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயது அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே ஹாட்லிக் கல்லூரி அணி வெற்றி பெற்றது.

இப்போட்டி நேற்று முன்தினம் ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஹாட்லிக் கல்லூரி அணி 48.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 237 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ப. நிரோஜன் 52, பிரதீப் 33, சிந்துஜன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோபிநாத் நான்கு, நிமலேந்திரன், நவதர்ஜன், சீர்த்தினன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 40.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிமல்ராஜ் 44, தவதர்சன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பாலமோகன் மூன்று, பிரசாத் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். (17)

# சென். ஜோன்ஸை வீழ்த்தியது சென்றல்

சென் ஜோன்ஸ் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் 118 ஓட்டங்களால் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயது அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே மத்திய கல்லூரி வெற்றிபெற்றது. இப்போட்டி கடந்த 12ஆம் திகதி சென் ஜோன்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இதில் சென் ஜோன்ஸ் 'பி' அணியும் மத்திய கல்லூரி அணியும் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய மத்திய கல்லூரி அணி 48 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. இதில் நிரோஜ் 75, நிருபன் 23, டர்வின் 17, சௌமிதரன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஏ.எஸ். வெனிஸ், துஷ்யந்தன் தலா மூன்று, வாகீசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு ஆடிய சென் ஜோன்ஸ் அணி 33.3 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சிவந்தன் 21, விஸ்ணு 10 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யூலியஸ் கனிஷ்டன், ஜெயந்திரன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# யூனியன் கல்லூரியை வீழ்த்தியது வவுனியா தமிழ் மகா வித்தியாலயம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான போட்டியில் இரண்டு விக்கெட்டுக்களால் வவுனியா தமிழ் மகாவித்தியாலய அணி வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 17 வயது அணிகளுக்கிடையிலான போட்டியிலேயே வவுனியா தமிழ் ம.வி. வெற்றிபெற்றது.

இப்போட்டி தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

50 ஓவர்கள் கொண்ட இப்போட்டியில் முதலில் ஆடிய யூனியன் கல்லூரி அணி, 24 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீர்த்தனன் 21, ஆகீசன் 15 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனையோர் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் டிசான் நான்கு, வர்ஷன் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.


பதிலுக்கு வெற்றியிலக்கு நோக்கி ஆடிய வவுனியா தமிழ் ம.வி. அணி எட்டு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ஜெயராஜ் 20, குகேன் 18 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் அன்ராஜ் ஐந்து, நிரோசன் இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.(42)

# அக்ரம் அதிருப்தி

(லாகூர்)

சில மூத்த வீரர்களின் அணுகுமுறை எனக்கு அலுப்பூட்டுகிறது. இதனால் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எரிசலடைகிறது. பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பிரச்சினை என்னவெனில் பயிற்சியாளர் அதிகாரம் வேண்டும்.

அணிக்கு பயிற்சி அளித்து கப்டனுக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும். கப்டனுக்கு மேல் தன்னை பயிற்சியாளர் நினைக்கலாகாது என பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் வாசிம் அக்ரம் அதிருப்தி தெரிவித்தார்.



கொழும்புத்துறையைச் சேர்ந்தவரும் நீண்டகாலமாக டென்மார்க்கில் வசித்து வருபவரும், சர்வதேச சோட்டோகான் கராத்தே சங்கத்தின் டென்மார்க்கின் பயிற்றுநருமாகிய மோகன்தாஸ் நேற்று முன்தினம் அக்கடமி ஒப் ஒறியன்ரரி மாசல் ஆட்ஸ் கராத்தே மாணவர்கள் 50 பேருக்கு கராத்தே பயிற்சிகளை வழங்கினார். இவர் றேமன் ஆசிரியரின் வேண்டுகோளிற்கிணங்க சினேகபூர்வமாக இப்பயிற்சிகளை வழங்கினார். இவர் தமது புதல்விகளான கத்தலீன், ஜெனிபர் (ஜப்பான் கறுப்புப் பட்டி பெற்றவர்கள்) ஆகியோருடன் இப்பயிற்சியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் கருத்துத் தெரிவித்த பயிற்றுநர் மோகன்தாஸ், இயல்பான இந்த சூழ்நிலையில் வீர, வீராங்கனைகள் தமது திறமைகளை வெளிப்படுத்தி, அடுத்த கட்ட வளர்ச்சிப் பாதைக்கு முன்னேற வேண்டும் என்றும், உங்களிடம் நல்ல திறமைகள் இருக்கின்றது எனவும், அதை உரிய முறையில் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (பா)

## பரிசுத்தொகை அதிகரிப்பு

(நியூயோர்க்)

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி அடுத்த மாதம் 29ஆம் திகதி நியூயோர்க்கில் தொடங்கவுள்ளது. இந்த போட்டிக்கான மொத்த பரிசுத்தொகை ரூபா 5 கோடி அதிகரிக்கப்பட்டு, ரூபா 106 கோடியாக உயர்ந்துள்ளது. கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் அதிகபட்ச பரிசுத் தொகை இதுவாகும்.

ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வெல்லும் வீரர், வீராங்கனைக்கு தலா ரூபா 8 கோடி பரிசாக அளிக்கப்படும். ஒற்றை யர் பரிசுத்தொகை கடந்த ஆண்டை விட 6.4 சதவீதம் அதிகமாகும். அத்துடன் தொடரில் சிறந்த வீரர், வீராங்கனையாக தேர்ந்தெடுக்கப்படுவோருக்கு மேலதிகமாக ரூபா 4.5 கோடி வழங்கப்படும்.

## கவலையடையும் பங்களாதேஷ் வீரர்கள்

(டாக்கா)

சர்வதேச கிரிக்கெட் சபையினால் வெளியிடப்பட்டுள்ள 2020ஆம் ஆண்டு வரையிலான டெஸ்ட் தொடருக்கான அட்டவணையையிட்டு பங்களாதேஷ் முன்னணி வீரர்கள் கவலையடைந்துள்ளனர்.

இதன்படி 2014, 2015 இல் இந்திய அணி, பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செல்ல உள்ளது. ஆனால் பங்களாதேஷ் அணியின் இந்திய பயணம் குறித்து எவ்வித தகவலும் இடம் பெறவில்லை.

இதன்மூலம் சாகிப் அல் ஹசன், தமிம் இக்பால், அப்துர் ரசாக், இம்ருல் கெய்ஸ், முகமது அஷ்ரபுல், மொர்டசா உள்ளிட்ட முன்னணி பங்களாதேஷ் வீரர்களுக்கு, இந்திய மண்ணில் டெஸ்ட் தொடரில் விளையாடும் வாய்ப்பு கிடைக்காமலே போய்விடும் அபாயம் ஏற்பட்டுள்ளமையே அவர்கள் கவலைக்கு காரணம் எனக் கூறப்படுகிறது. பங்களாதேஷ் வீரர்களின் நீண்டநாள் கனவு நிறைவேற, இந்தியக் கிரிக்கெட் சபை மனது வைத்தால் மட்டுமே முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## நாடு திரும்பியது இலங்கை அணி



(கொழும்பு)

இங்கிலாந்துக்கான கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் நேற்று முற்பகல் நாடு திரும்பினர். கட்டுநாயக்காவிலுள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த வீரர்கள் அங்கு ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்துக்களையும் வெளியிட்டனர்.

இந்நிலையில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் குமார் சங்கக்கார அண்மையில் தான் ஆற்றிய சர்ச்கைக்குரிய உரை தொடர்பில் இதன்போது ஊடகவியலாளர்களிடம் விளக்கமளித்தார்.

அங்கு உரையாற்றிய அவர், நான் இலங்கையைப் பற்றியும் இலங்கை மக்கள் பற்றியுமே பேச முற்பட்டேன். 30 வருடங்களாக நாட்டில் நிலவிய யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரான இலங்கையர்கள் அனைவரதும் இயலுமைகள் பற்றியே எனது உரையின் போது விளக்கமளித்தேன். இந்நிலையில் எனது உரைக்கு பெரும் வரவேற்பு கிடைத்தது என்று அவர் குறிப்பிட்டார்.

## இந்தியாவிற்கு எதிராக சதமடித்தமை எனது சிறந்த போட்டிகளில் ஒன்றாகும்

**சந்தர்போல்**

( டொமினிகா)

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சதமடித்தது நான் விளையாடிய சிறந்த இன்னிங்ஸ்களில் ஒன்று என மேற்கிந்தியத்தீவுகளின் மூத்த வீரர் சிவநாராயண் சந்தர்போல் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது டெஸ்ட் போட்டியின் கடைசி நாளில் துடுப்பாட்டம் செய்தபோது, பந்துகள் பவுன்சர்களாக வந்ததோடு, கடுமையாக சுழன்றன. பந்துகள் எப்படி வருகின்றன என்பதையே கணிக்க முடியவில்லை. அதனால் மிகவும் பொறுமையாக பந்துகளைக் கவனமாக கணித்து ஆட வேண்டிய நிலை ஏற்பட்டது. களத்தில் நிலைத்து நின்று ஆடுவதற்காக எல்லாவிதமான ஆட்ட உத்திகளையும் பயன்படுத்தினேன். இக்கட்டான நேரம் என்பதால் மன ரீதியாகவும் என்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது எனவும் தெரிவித்தார்.

மூன்றாவது டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் 8 மணி நேரத்துக்கும் மேல் களத்தில் நின்ற சந்தர்போல், 343 பந்துகளை சந்தித்து 116 ரன்கள் குவித்து ஆட்ட நாயகன் விருதைத் தட்டிச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அவுஸ்ரேலியாவுடனான தொடர் ரொமேஸ் ரட்ணாயக்க பயிற்றுநர்

(கொழும்பு)

இலங்கையில் நடைபெறவுள்ள அவுஸ்ரேலிய அணிக்கெதிரான கிரிக்கெட் தொடருக்கு இலங்கை அணியின் பயிற்றுநராக முன்னாள் வீரர் ரொமேஸ் ரட்ணாயக்க நியமிக்கப்பட்டுள்ளரென இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் உபாலி தர்மதாஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 1982 - 1993 காலப் பகுதியில் இலங்கை அணியில் அங்கம் வகித்த ரோமேஸ் ரட்ணாயக்க, 23 டெஸ்ட் போட்டிகளிலும், 70 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார்.அத்துடன் 2011ஆம் ஆண்டு இலங்கை அணியின் நிர்வாக முகாமையாளராகக் கடமையாற்றிய இவர், 2003ஆம் ஆண்டு ஆசிய கனவு அணியின் அபிவிருத்தி அலுவலராகவும், பயிற்றுநராகவும் இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இடத்தை பறிகொடுக்கலாம்

(துபாய்)

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்தியா மோசமாக இழந்தால் முதல் நிலை இடத்தைப் பறிகொடுக்க வேண்டி வரும். தரவரிசையில் 117 புள்ளிகளுடன் 3ஆவது இடம் வகிக்கும் இங்கிலாந்து அணி 3-1 அல்லது 2-0 என்ற கணக்கில் தொடரை வென்றால் இந்தியா, தென்னாபிரிக்காவை பின்னுக்கு தள்ளிவிட்டு முதலிடத்தை ஆக்கிரமிக்கும். அப்போது இந்திய அணி, இங்கிலாந்தை விட 3 புள்ளிகள் பின்தங்கி 2ஆவது இடத்திற்கு தள்ளப்படும். தென்னாபிரிக்கா 3ஆவது இடத்திற்கு சரியும்.

தொடரை 4-0 என்ற கணக்கில் இங்கிலாந்து கைப்பற்றினால், இந்தியா 3ஆவது இடத்திற்கு இறங்கும்.

1-0 அல்லது 2-1 என்ற கணக்கில் இங்கிலாந்து தொடரை தனதாக்கினால், புள்ளி எண்ணிக்கையில் இந்தியாவுடன் சமநிலை பெறும். இருப்பினும் மயிரிழையில் இந்தியா முதலிடத்தில் நீடிக்கும்.

## கடுமையாக தண்டிக்கவேண்டும்

(இந்தூர்)

ஊக்கமருந்து சோதனையில் சிக்கும் விளையாட்டு நட்சத்திரங்களின் குற்றம் நிரூபிக்கப்பட்டால், கடுமையாக தண்டிக்க வேண்டும் என இந்திய ரென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா தெரிவித்துள்ளார். ஊக்க மருந்து சோதனையில், ஏழு இந்திய தடகள வீராங்கனைகள் சிக்கியது வருத்தம் அளிக்கிறது. இவர்கள், நமது தேசத்துக்கு அவப்பெயரை ஏற்படுத்திவிட்டனர். இவர்களது குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில், கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அப்போது தான், இதுபோன்ற சட்ட விரோத செயல்களில் மற்ற விளையாட்டு நட்சத்திரங்கள் ஈடுபடமாட்டார்கள். வரும் காலங்களில், இந்திய பெண்கள் ரென்னிசுக்கு சிறப்பான எதிர்காலம் இருப்பதாகத் தெரியவில்லை. எனக்கு பின், கிராண்ட்ஸ்லாம் உள்ளிட்ட சர்வதேச போட்டிகளில் விளையாடும் தகுதி பெற்ற வீராங்கனைகள் இன்னும் உருவாகாமல் இருப்பது வருத்தம் அளிக்கிறது. ஒருநாள் நானும் ஓய்வு பெற்றுவிடுவேன். அதற்குள் சிறந்த வீராங்கனையை தயார் படுத்திவிட்டால் நல்லது எனவும் தெரிவித்தார்.

## வெற்றிகரமான ரென்னிஸ் வீராங்கனையாக வருவேன் என கனவில்கூட நினைக்கவில்லை

ஒரு வெற்றிகரமான ரென்னிஸ் வீராங்கனையாக வருவேன் என்று இளம் வயதில் நினைத்துக் கூடப் பார்த்ததில்லையென விம்பிள்டன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற செக் குடியரசின் கிவிட்டோவா தெரிவித்தார். கடந்த ஆண்டு விம்பிள்டன் தொடரின் போது, 62ஆவது இடத்தில் இருந்த நான், இப்போது 7ஆவது இடத்துக்கு முன்னேறியது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. இந்த மாற்றம் மிக விரைவாக நடந்துள்ளது. அடுத்து வரும், யு.எஸ். ஓப்பன் ரென்னிஸ் தொடரிலும் சாதிக்க ஆசையாக உள்ளது.

பொதுவாக செக் குடியரசில் ஜிம்னாசிய கிளப்கள் தான் அதிகமாக உள்ளன. இங்கு கற்றுத்தரப்படும் ஜிம்னாஸ்டிக்சை தான், குழந்தைகள் உட்பட அனைவரும் விரும்புகின்றனர். ரென்னிஸ் போட்டிகள் பொழுது போக்கிற்காக மட்டும் விளையாடப்படும். இங்கு மொத்தம் நான்கு ரென்னிஸ் மைதானங்கள் தான் உள்ளன. முதலில் என்னையும் ஜிம்னாஸ்டிக்சில் சேர வற்புறுத்தினர். ஆனால் நான் ரென்னிசை தேர்வு செய்தேன். மரத்தினால் ஆன சிறிய ரென்னிஸ் கிளப்பில் தான் பயிற்சி செய்தேன். இங்கு டாய்லெட் வசதி கூட கிடையாது. 16 வயதில் இருந்து தினமும் ஒரு மணி நேரம் ரென்னிஸ் விளையாடுவேன்.

விளையாட்டு ஆசிரியராக இருந்த, எனது அப்பா தான் பயிற்சியாளர். இவரை எதிர்த்து தான் பயிற்சி செய்வேன். ஏனெனில், எதிர்த்து விளையாட வேறுயாரும் வீராங்கனைகள் இருக்க மாட்டார்கள். மற்ற நேரங்களில் சுவற்றின் மீது அடித்து வரும் பந்தைத் தான் அடித்து பழகினேன் எனவும் தெரிவித்தார்.



## இறுதிப் போட்டியில் அமெரிக்கா - ஜப்பான்

(பிராங்பர்ட்)

பெண்களுக்கான உலகக் கோப்பை கால்பந்து தொடரின் இறுதிப் போட்டிக்கு அமெரிக்கா, ஜப்பான் அணிகள் முன்னேறியுள்ளன.

இதில் அமெரிக்காவுக்கும், பிரான்ஸுக்கும் இடையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாவது முறையாக அமெரிக்க இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

மற்றொரு அரையிறுதியில் ஜப்பான்-சுவீடன் அணிகள் மோதின. இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜப்பான் அணி, ஆட்டநேர முடிவில் 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று, முதன்முறையாக உலக கோப்பை இறுதிப் போட்டிக்கு முன்னேறி, புதிய வரலாறு படைத்தது.

இதன்மூலம் வரும் 18ஆம் திகதி பிராங்பர்ட் நகரில் நடக்கவுள்ள முக்கியமான இறுதிப் போட்டியில் அமெரிக்கா, ஜப்பான் அணிகள் மோதவுள்ளன. மூன்றாவது இடத்துக்கான போட்டியில் பிரான்ஸ், சுவீடன் அணிகள் பலப்பரீட்சை மேற்கொள்கின்றன.

## கிரிக்கெட்டை பாதிக்கும் வகையில் அவுஸ்ரேலியா நடக்கக் கூடாது

(லண்டன்)

இலங்கை சுற்றுப்பயணத்தில் இருந்து விலகும் முடிவை எடுக்கும் உரிமை ஒவ்வொரு வீரருக்கும் உண்டு. ஆனால் அவுஸ்ரேலிய அணி திட்டமிட்டபடி இலங்கை சென்று விளையாடாவிட்டால் அது உலக கிரிக்கெட்டை பாதிக்கும் என முத்தையா முரளிதரன் தெரிவித்தார்.

இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடத் திட்டமிட்டுள்ள போட்டித் தொடரை அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி புறக்கணிக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ள நிலையிலேயே முரளிதரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.விளையாட்டும், அரசியலும் வெவ்வேறானவையாகும். அவுஸ்ரேலிய அணி, இலங்கை, பாகிஸ்தான், சிம்பாப்வே ஆகிய நாடுகளுக்கு சென்று விளையாடவில்லை என்றால் அந்த அணி சில நாடுகளுடன் மட்டும் தான் விளையாட முடியும். இதனால் உலக கிரிக்கெட் அழிந்துபோகும் நிலை ஏற்படும். ஐ.பி.எல். முக்கிய இடத்தை பிடிக்கும். இங்கிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் தஞ்சம் அடைந்து நாடு திரும்ப விரும்பாத சிலர் தான் தங்கள் சொந்த நாடான இலங்கை மீது தவறான அபிப்பிராயத்தைப் பரப்புகிறார்கள். தங்களது சுய ஆதாயத்துக்காக இதனை அவர்கள் செய்கிறார்கள் என முரளி மேலும் தெரிவித்துள்ளார்.

## கோபா அமெரிக்க கால்பந்து மெஸ்ஸி மீது ரசிகர்கள் அதிருப்தி

கோபா அமெரிக்கா கால்பந்து போட்டியில் அர்ஜென்டீன அணியில் விளையாடும் மெஸ்சியின் ஆட்டம் மோசமாகவுள்ளதாக அர்ஜென்டீன ரசிகர்களும், பத்திரிக்கைகளும் கடும் எரிச்சல் அடைந்துள்ளனர். போட்டியை நாம் நடத்துகிறோம். வெற்றி பெற்றே தீர வேண்டும். கழக அணிகளுக்கு எதிராக ஆடுவதைப் போல ஓடியாடி விளையாடுங்கள் என ரசிகர்கள் எரிச்சலுடன் கூறியுள்ளனர்.

இதேவேளை, மெஸ்சி மீது தொடர்ந்து விமர்சனம் செய்ய வேண்டும். இப்படி அந்த வீரரை நிர்பந்தித்தால் அவர் அர்ஜென்டீனா அணியில் ஆடுவதை விட்டுவிடுவார் என அர்ஜென்டின கால்பந்து சங்கத்தலைவர் ஜீலியோ குரோன்டோனா எச்சரித்துள்ளார். ரசிகர்கள் கடுமையாக விமர்சித்த போதும் அர்ஜென்டீன அணிக்கு உதவ வேண்டும் என மெஸ்சி போராடுகிறார். பார்சிலோனா கழகத்தில் ஆடும் மெஸ்சி தனது தாய் நாடான அர்ஜென்டீன அணிக்கு ஆடுவதை பெருமையாக கருதுகிறார். மெஸ்சி அர்ஜென்டீன ரோசரியோவில் பிறந்து வளர்ந்தவர் எனவும் அவர் தெரிவித்தார்.

# வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 7 எரிபொருள் நிலையங்கள் அமைப்பு



(கொழும்பு)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் மூலம் எரிபொருள் நிரப்பும் நிலையங்களை திறந்து வைக்க பெற்றோலிய வளத்துறை அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய வடமாகாணத்தில் ஏழு இடங்களில் புதிதாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களை திறந்து வைக்கப்படவுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அந்தவகையில் வவுனியா, முல்லைத்தீவு மற்றும் விசுவமடு ஆகியபகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ள அதேவேளை கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் மேலும் நான்கு நிரப்பு நிலையங்களும் திறந்துவைக்கப்படவுள்ளன.

புதிதாக திறந்து வைக்கப்படவுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களை அந்தந்தப் பகுதிகளில் உள்ள கூட்டுறவு சங்கங்கள் நிர்வகிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் மீள்குடியேற்றம் மற்றும் நிலக் கண்ணிவெடி அகற்றும் பணிகள் நிறைவுபெற்றதும் அம் மக்களுக்கு தேவையான மண்ணெண்ணெய் உள்ளிட்ட அனைத்து எரிபொருட்களையும் விநியோகிக்க இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த எரிபொருள் நிலையங்களுக்குத் தேவையான எரிபொருளை அநுராதபுரம் மற்றும் வவுனியா ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள களஞ்சியசாலைகளில் இருந்து பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பல்கலை மாணவருக்கான பதிவு நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ள புதிய மாணவர்களின் பதிவு நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகியுள்ளதாக உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்றையதினம் ஆரம்பமாகிய இந்தப் பதிவு நடவடிக்கைகள் எதிர்வரும் முப்பதாம் திகதியுடன் நிறைவடைய உள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி கடந்த 11ஆம் திகதி ஆரம்பமானது இந்தப் பயிற்சி நெறியும் எதிர்வரும் 30 அம் திகதியுடன் நிறைவடைய உள்ளதாகவும் உயர்கல்வி அமைச்சு தெரிவித்தது.

# சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஊழல் மோசடிகள் அதிகரிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலை திணைக்களத்தில் பல்வேறு ஊழல் மோசடிகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறைச்சாலை தலைமயகம் மற்றும் ஏனைய சிறைச்சாலை அதிகாரிகள் இவ்வாறு மோசடிகளில் ஈடுபட்டு வருவதாக 300க்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சினால் நடத்தப்பட்ட விசாரணைகளின் மூலம் இந்தத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சிறைச்சாலைகளில் காணப்படும் ஏனைய முறைகேடுகள் தொடர்பிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## – க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய –

# புனர்வாழ்வு பெற்ற முன்னாள் புலி உறுப்பினர்களில் இருவர் மருத்துவத்திற்கும், மூவர் பொறியியலுக்கும் தெரிவு

(கொழும்பு)

இறுதி யுத்தத்தின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வழிக்கப்பட்ட முன்னாள் புலிகள் உறுப்பினர்களில் கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 140 பேர் பல்கலைக்கழகங்களில் அனுமதிக்குத்தகுதி பெற்றுள்ளனர். இவர்களில் இருவர் மருத்துவ பீடத்திற்கும், மூவர் பொறியியல் பீடத்திற்கும் தெரிவாகியுள்ளனர்.

இத்தத் தகவலை புனர்வாழ்வு அமைசசின் செயலார் ஏ.திசாநாயக்க வெளியிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த உயர்தரப் பரீட்சையில் புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்டு வந்த 300 முன்னாள் புலி உறுப்பினர்கள் தோற்றி இருந்தனர் இவர்களில் 210 பேர் சித்தியடைந்துள்ளனர். 14பேர் பல்கலைகழக அனுமதி பெற்றுள்ளனர்.

இறுதி யுத்தத்தின் போது 12296 பேர் இராணுவத்தினரிடம் சரண்அடைந்திருந்தனர் இவர்களில் 9350 பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைககப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் இவ்வருட இறுதிக்குள் சமூகத்துடன் இணைககப்படவுள்ளனர்.

சரணடைந்தவர்கள் அறுபிரிவுகளாக பிரிக்கப்பட்டு புனர்வாழ்வளிக்கப்பட்டனர். ஏ.பி.சி.டி. ஈ.எவ். என இவர்கள் பிரிக்கப்பட்டதுடன் முதல் மூன்று பிரிவினரும் சிரேஷ்ட உறுப்பினர்களாகவும் இறுதி மூன்று பிரிவினரும் பலவந்தமாக புலிகள் அமைப்பில் இணைக்கப்பட்டவர்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களில் பலவந்தமாக இணைக்கப்பட்டவர்கள், பெண்கள், ஊனமுற்றவர்கள், குழந்தைகளை அங்கத்தவராகக் கொண்ட குடும்பத்தலைவர்கள் என்ற அடிப்படையில் விடுக்கப்பட்டு வந்தனர்.

புனர்வாழ்வு முகாம்களில் வைத்து 10114பேருக்கு சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. மொழிவிருத்தி பயிற்சி, தகவல் தொழில் நுட்பபயிற்சி, மேசன்தொழில் பயிற்சி, சமயல்கலை, அழகுக்கலை பயிற்சிஉட்பட பல்வேறு சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

2011ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதியில் இவர்களின் புனர்வாழ்வளிப்பிற்காக 728,195,206 ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன.

புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு வசதியாக பல்வேறு கடன் திட்டங்களும், வழங்கப்பட்டுள்ளது. என அவர் தெரிவித்தார்.

# மருந்து கொள்வனவு, விநியோகத்தை மேற்கொள்ள அமைச்சரவை உபகுழு

(கொழும்பு)



மருந்து கொள்வனவு, விநியோகம் உள்ளிட்ட முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிக்க தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அவ்வப்போது ஏற்படும் மருந்து தட்டுப்பாட்டினை நீக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது. இத்திட்டத்திற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக சுகாதார அமைச்சர் மைதிரிபால சிறிசேன அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருந்து கொள்வனவு தொடர்பான தற்போதைய விலை மனு கோரல் நடைமுறையில் மாற்றம் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளையும் உத்தேச அமைச்சரவை உபகுழு மேற்கொள்ளும் என சுகாதார அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

# சட்டவிரோத குடிநீர் இணைப்பு 680 பேருக்கு எதிராக நடவடிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக குடிநீர் இணைப்பை பெற்றிருந்த 680 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது

கடந்த ஐந்து மாதங்களாக சபையின் அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் மூலம் இந்த சட்ட விரோத நடவடிக்கைகள் இனங்காணப்பட்டதாக அதன் தலைவர் கருணாசேன ஹெட்டிஆராச்சி தெரிவித்தார்.

கொழும்பு நகரத்திலேயே அதிகளவான சட்ட விரோத குடிநீர் இணைப்பை பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

வெளி மாவட்டங்களிலும் சட்டவிரோத குடிநீர் இணைப்பை பெற்றுக் கொண்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் அவர்கள் தொடர்பாகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட தொலைபேசி இலக்கத்தினூடாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கு ஏற்ப சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார்

சட்டவிரோத குடிநீர் இணைப்பை பெற்றுள்ளவர்களிடம் பெருந்தொகை பணத்தை அபராதமாக அறவிட முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்

# புலிகளின் ஆதரவாளருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளது

(கொழும்பு)

புலிகளின் ஆதரவாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் ஐந்து நிறுவனங்களைச் சேர்ந்த 20 பேருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிவித்து வழக்குத் தொடரப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்கள் பற்றிய தகவல்கள் குற்ற விசாரணைப் பிரிவினரிடம் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குளோபல் தமிழ் போரம் அமைப்பின் தலைவர் வணக்கத்திற்குரிய இமானுவேல் அடிகளாரின் பெயரும் இந்த பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி இலங்கை பிக்கு பிலிப்பைன்ஸில் கைது

(கொழும்பு)

பிலிப்பைன்ஸின் பாஸே நகரில் 9 வயது சிறுமி ஒருவரை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இலங்கையின் பௌத்த பிக்கு ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

அவர் கடந்த புதன்கிழமை இரவு கைதுசெய்யப்பட்டார்.

குறித்த சிறுமியும் அவரின் தாயும் ஹோட்டல் ஒன்றிற்கு முன்னால் நின்று கொண்டிருந்த வேளையில் பௌத்த பிக்கு சிறுமியை துஷ்பிரயோகம் செய்ய முயற்சித்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது தாய் சத்தமிடவே வீதி துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த பெண் குறித்த பௌத்த பிக்குவை கைதுசெய்ய உதவியுள்ளார்.

பிக்கு இலங்கையை சேர்ந்த 43 வயதான நிலந்த உடுவக்க என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் மணிலாவின் பல்கலைக்கழகம் ஒன்றில் கடமையாற்றி வருகிறார்.

# இந்திய வைத்தியர்களுக்கு போதிய தகைமை இல்லையாம்

(கொழும்பு)

இலங்கையில் உள்ள பிரதான தனியார் வைத்தியசாலையில், இரண்டு இந்திய வைத்தியர்கள் சத்திரசிகிச்சையை மேற்கொள்ள, வைத்தியர்கள் சபை கடந்த புதன்கிழமை அனுமதி வழங்கியது.

இது தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கு அரச வைத்திய அதிகாரிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

தோற்பட்டை சிகிச்சை தொடர்பிலேயே இந்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

எனினும் குறித்த சத்திர சிகிச்சையை மேற்கொள்ள குறித்த இரண்டு வைத்தியர்களுக்கும் தகுதி இல்லை என அரச வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சிகிச்சையை மேற்கொள்வதற்கு முன்னர், அவர்கள் தோற்பட்டை சிகிச்சை வைத்தியர்கள் சங்கத்தில் அனுமதி பெற்றிருக்க வேண்டும் என வைத்தியர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், இலங்கையில் காணப்படுகின்ற அதிக அளவிலான வெளிநாட்டு வைத்தியர்கள் இந்தியாவை சேர்ந்தவர்களாவர். அவர்களுக்கு போதிய தகைமை இல்லை என அரச வைத்தியர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தனியார் வைத்தியசாலைகளில் இந்திய வைத்தியர்களிடம் சிகிச்சை பெறும் நோயாளர்கள், மீண்டும் இலங்கை வைத்தியர்களிடம் சிகிச்சைப் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஈராக்கில் உண்ணாவிரதம் இருக்கின்ற இலங்கையருக்கு முழுமையான சம்பளம்

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

ஈராக்கில் உண்ணாவிரதம் இருந்து வரும் 41 இலங்கையர்களுக்கும் சம்பளத்தை பெற்றுககொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதுடன், அவர்கள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சின் தொடர்பாடல் பிரிவுத் தலைமை அதிகாரி சரத் திஸாநாயக்க இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும தெரிவிக்கையில்-

தங்களுக்குரிய சம்பளம் வழங்கப்படாமையால் தற்கொலை செய்யப்பபோவதாகக் கூறி உண்ணாவிரதம் இருந்து வரும் இலங்கைப் பணியாளர்கள் 41 பேருக்கும் தலா 300 டொலர் பணம் வழங்கப்பட்டு நாட்டுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள் என ஈராக் அரசாங்கம் அறிவித்துள்ளாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை.

இந்தப் பணியாளர்களின் விடயத்தில் ஈராக் பிரதமர் நூலி அல்மலிக்கி நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இவர்களுக்கான முழுச்சம்பளத்தையும் வழங்க ஈராக் இணக்கம் தெரிவித்துள்ளது.

லெபனானில் உள்ள இலங்கைத் தூதுவர் ஈராக் அரசாங்கத்துடன் இது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டது. இதன பயனாக ஈராக் பிரதமர் இவ்விடயத்தில் நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இதன்படி அவர்களுக்குரிய மாதச் சம்பளம் முழுமையாக வழங்கப்படவுள்ளது. இவர்கள் நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

# தேர்தல் வன்செயல்; 78 பேர் கைதாகினர்

(கொழும்பு)

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு, இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பாக, 78 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாக, தேர்தல் தொடர்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரத்ன தெரிவித்தார்.

அத்துடன் இதுவரை தேர்தல் முறைகேடுகள் தொடர்பாக, 58 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் 28 முறைப்பாடுகள் அமைதியைச் சீர்குலைக்கும் வகையில் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் இந்தத் தேர்தல் வன்முறைகளுக்காக 18 வாகனங்களும் பயன்படுத்தப்பட்டதாகவும் அவையும் பறிமுதல் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் இல்லை

(கொழும்பு)

எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் எங்கும் கடமையில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள் எனத் தேர்தல் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நடைபெறவுள்ள 64 உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களையும் வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் கண்காணிக்க வேண்டுமென எவ்வித கோரிக்கையயும் கிடைக்கவில்லை.

அத்துடன் தேர்தலை கண்காணிப்பதற்காக வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் எவரையும், நியமிக்க வேண்டிய தேவையும் இல்லை. எனினும் தேர்தலைக் கண்காணிப்பதற்குப் பல உள்ளூர் கண்காணிப்பாளர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மேலுமொரு தொகுதி மக்கள் கொக்கிளாயில் மீள்குடியேற்றம்

(கொக்கிளாய்)

கொக்கிளாய் பிரதேசத்தில் மேலும் ஒரு தொகுதி மக்கள் அண்மையில் மீளக்குடியேறியுள்ளனர்.

கொக்கிளாய் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து உறவுகள் வீடுகளிலும், முகாம்களுக்கு வெளியிலும் வசித்த கொக்கிளாய் மக்களே தற்போது மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்காலிகமாக கொக்கிளாய் அ.த.க.பாடசாலையிலும், கொக்கிளாயில் ஏற்கனவே குடியமர்ந்து மக்களின் வீடுகளிலும் தங்கியுள்ளனர்.

இவ்வாறு தங்கியுள்ள மக்கள் தமது காணிகளைத் துப்புரவாக்கித் தற்காலிக வாழ்விடங்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, மீளக்குடியமர்த்தப்பட்ட கொக்கிளாய் மக்களின் வாழ்விடங்களை அமைக்கும் பணியில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்து வருகின்றன.

கொக்கிளாய் பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு முதற்கட்டமாக குறித்த வீடுகள் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டுகின்றது.

அதேவேளை, ஒரு தொகுதி மக்களுக்குத் தற்காலிக வீடுகள் அமைக்கப்படுவதற்கான பொருட்களும் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. (17)

# மருந்துப் பொருள் கொள்வனவிற்கான நிதியை வழங்க திறைசேரிக்குப் பணிப்பு

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளுக்குரிய மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதற்குரிய நிதியினை உடனடியாக வழங்குமாறு திறைசேரிக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த ஆண்டின் முதல் ஆறு மாத காலப் பகுதிக்கான மருந்துக் கொள்வனவுக்காக அரசாங்கம் 16 பில்லியன் ரூபாவினைச் செலவு செய்துள்ளது. இந்த மருந்துப் பொருட்கள் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளிடமிருந்து அரசாங்கம் நேரடியாகக் கொள்வனவு செய்திருந்தது.



மருந்துப் பொருள் கொள்வனவின் போது தனியார் நிறுவனங்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படவில்லை. மோசடிகளைத் தவிர்க்கவும் தரமான மருந்துப் பொருள் கொள்வனவுக்காகவும் இந்த நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் மருந்துப் பொருட்களுக்குத் தட்டுப்பாடுகள் நிலவி வந்தன. இவற்றைப் போக்க துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுவோர் எவ்வித சிரமமுமின்றித் தமது சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள் அனைவருக்கும் இந்த வருடம் முதல் நீண்டகாலக் கடன் அடிப்படையில் மடிக்கணனிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாணவர்களுக்கான இந்த வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உயர் கல்வி அமைச்சு திட்டங்களை வகுத்துள்ளது. மடிக்கணினிகள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதுடன் இணையத்தள இணைப்பு வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

இந்தக் கடன் வசதிகளை வழங்குவதற்கு கொமர்ஷல் வங்கி முன்வந்திருக்கிறது. நியாய விலையில் அல்லது நீண்ட காலக் கடன் அடிப்படையில் வழங்கப்படும் இக்கணினிகளுக்கான கொடுப்பனவுகள் அவர்கள் தமது பட்டப்படிப்பை முடித்து வேலை வாய்ப்பினைப் பெற்ற பின்னர் செலுத்துவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

# உயர் குருதியமுத்தம்

## வீதியில் தவறி வீழ்ந்த வயோதிப மாது காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் கே.கே.எஸ்.வீதியில் தனது கணவரை ஏற்றிக்கொண்டு மோட்டார் சைக்கிளில் சென்ற வயோதிப் பெண்ணொருவர் உயர்குருதி அழுத்தம் காரணமாக வீதியில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

ஆர்.மனோன்மணி (வயது-65) என்ற பெண்ணே இவ்வாறு வீதியில் வீழ்ந்த படுகாயமடைந்துள்ளார்.

சம்பவ நேரம் குறித்த பெண் தலைக் கவசம் அணிந்திருக்கவில்லை எனவும் அவரது தலையில் படுகாயம் ஏற்பட்ட நிலையில் அவரது கணவன் அவரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதித்தார்.

இச்சம்பவத்தில் அவரது கணவர் காயங்கள எதுவுமின்றித் தப்பித்துக் கொண்டார். (பா)

# ஓமந்தை-யாழ். ரயில் பாதை புனரமைப்பு கண்ணிகள் அகற்றப்படாமையே காரணம்

## என்கிறார் இந்தியப் பிரதித்தூதுவர்

(கொழும்பு)

ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான ரயில் பாதைப் புனரமைப்புத் தாமதடைவதற்குக் கண்ணிவெடிகள் அகற்றப்படாமையே காரணமென இலங்கைக்கான இந்தியத் பிரதித் தூதுவர் விக்ரம் மிஸ்ரா தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

வடபகுதிக்கான ரயில் பாதையைப் புனரமைப்பதற்கு இந்திய அரசு ஆர்வமாகவே உள்ளது. எனினும் கண்ணிவெடி அகற்றப்படாதமையே புனரமைப்புத் தாமதத்திற்கான காரணமாகும். எனினும் மதவாச்சி, தலைமன்னார் இடையேயான ரயில் பாதையின் புனரமைப்பை இந்திய அரசு துரிதப்படுத்தியது.

அத்துடன் மீள்குடியமர்ந்த மக்கள் தமது வீடுகளை அமைப்பதற்காக 8985 சீமெந்துகளை வழங்கியுள்ளது. அத்துடன் 10327 விவசாயக் குடும்பங்களுக்கு விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது. சிமெந்து மற்றும் உபகரணங்கள் 800 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருந்த மூன்று இலட்சம் மக்களை விரைவாக அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்திய அரசாங்கத்தையும் அவர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

# கொக்கிளாய் வைத்தியசாலைக்கு தற்காலிகக் கட்டடம் அமைப்பு

(கொக்குகிளாய்)

கொக்கிளாய் பகுதியில் முன்னர் இயங்கி வந்த வைத்தியசாலைக் கட்டடத்தைத் தற்காலிகமாக அமைப்பதற்கு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

கொக்கிளாய் பகுதியில் ஆரம்ப வைத்தியசாலை ஒன்றே முன்னர் இயங்கி வந்தது. தற்போது வைத்தியசாலையின் ஒரு சிறிய கட்டடத்தில் இவ் ஆரம்ப வைத்தியசாலை இயங்கி வருகின்றது.

இவ்வைத்தியசாலைக்குச் செம்மலை, முல்லைத்தீவு பகுதிகளில் இருந்து வைத்தியர் தினமும் சென்று நோயாளர்களைப் பார்வையிட்டு வருகின்றனர்.

கட்டட வசதிகள் இருப்பிடங்களின்றிப் போதுமான அளவில் காணப்படாதது வைத்தியசாலையில் தங்கியிருந்து சேவை புரிவதில் சிரமங்களை எதிர்நோக்கி இருந்தனர்.

இந்த வைத்தியசாலை நிலைமையைக் கருத்திற்கொண்டு வைத்தியசாலைக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்கும் பணியில் முதற்கட்டமாக தற்காலிக வைத்தியசாலை தற்போது அமைக்கப்பட்டு வருகின்றது. (17)

# செட்டிக்குளம் நலன்புரி நிலைய மக்கள் விரைவில் மீள்குடியேற்றப்படுவார்கள்

## வவுனியா அரச அதிபர் உறுதிமொழி

(வவுனியா)

வவுனியா, செட்டிகுளத்திலுள்ள கதிர்காமர் மற்றும் ஆனந்த குமாரசாமி ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்கள் எதிர்வரும் சில மாதங்களில் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் தெரிவித்துள்ளார்.

3600 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் பேர் தங்கியுள்ள குறித்த நலன்புரி நிலையங்களிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு வவுனியா அரச அதிபர் அந்த நலன்புரி நிலையங்களுக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தார்.

இச் சந்தர்ப்பத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ் விஜயத்தின்போது பாதுகாப்புத் தரப்பின் உயர் அதிகாரிகளும் உடனிருந்தனர்.

# புதுக்குளம் மகா வித்தியாலயத்தில் வவுனியா மாவட்ட சாரணர் ஒன்றுகூடல்

(வவுனியா)

வவுனியா மாவட்ட சாரணர் சங்கம் நடத்தும் மாவட்ட சாரணர் ஒன்றுகூடல் புதுக்குளம் மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதன் ஆரம்ப நிகழவு இனறு சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு வைபவரீதியாக நடைபெறும். வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் பி.கணேசலிங்கம் பிரதம அதிதியாகவும், ஓமந்தை கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஏ.கே. சகாயராஜா கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் 397 சாரணர்கள் பங்குகொள்கின்றனர். 15 பாடசாலைகளிலிருந்து 54 பெண் சாரணர்களும், 55 குருளைச்சாரணர்களும், 32 சாரணர் தலைவர்களும் இம்முகாமில் பங்குபற்றுகின்றனர். உதவி மாவட்ட ஆணையாளர் சு.பரமேஸ்வரன் இவ் ஒன்றுகூடல் நிகழ்வின் அமைப்பு ஆணையாளராக செயற்படவுள்ளார்.

# மன்னாரில் 30 இலட்சம் ரூபா செலவில் நெல் அவித்து உலரவைக்கும் நிலையம்

(மன்னார்)

மீள் எழுச்சித்திட்டத்தின் நிதி உதவியுடன் மன்னார் மூர்வீதியில் உள்ள நெல் களஞ்சிய சாலையில் நெல் அவித்து உலரவைக்கும் நிலையம் ஒன்று 30 இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையத்தின் திறப்பு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் நகர பிதா சந்தான் பிள்ளை ஞானப்பிரகாசம், விதைகள் உற்பத்தி திணைக்களத்தின் (ஸ்பாம்) தலைவர் சௌர்ந்தரநாயகம், யு.என்.டி.பி அமைப்பின் இயக்குநர் அகஸ்ரின் மற்றும் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கிளிநொச்சி மாவட்டத்தில் 65 ஆயிரம் வாக்காளர்கள்

## அரச அதிபர் தகவல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தேர்தலில் 65 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றிருப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலும், இம்முறை தேர்தல் நடவடிக்கைகள்யாவும் கிளிநொச்சி அரச செயலகத்தினால் கையாளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு சகல ஆவணங்களையும் இழந்துள்ள இந்த மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மையான மக்கள், தேர்தலில் வாக்களிப்பதற்குத் தங்களை அடையாளம் காட்டுவதற்குரிய தேசிய அடையாள அட்டைகளின்றி இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இவ்வாறானவர்களுக்குத் தேர்தலின்போது பயன்படுத்துவதற்கு வசதியாகத் தற்காலிக அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# அமிர்தலிங்கத்தின் சிரார்த்த நிகழ்வில் பிரமுகர்கள் கலந்து அஞ்சலி செலுத்தினர்


(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முனனாள் செயலாளர் நாயகமும், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் மற்றும் வெற்றிவேலுயோகேஸ்வரன் ஆகியோரின் 23 ஆவது சிரார்த்தன தின அஞ்சலி தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊடகச் செயலாளர் கஜன் தலைமையில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது.

கட்சியின் யாழ்.மாவட்டத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஈகைச் சுடரினை உறுப்பினர் மதியழகராசா, முன்னாள் மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் ஆகியோர் ஏற்றிவைக்க, கட்சியின் பிரமுகர்களும், தொண்டர்களும மலரஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து இரங்கலுரைகளும் இடம்பெற்றன.

இங்கு தமிழரசுக் கட்சி செயலாளர் மாவை சேனாதிராஜா, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதல்வர் அ.வரதராஜ பெருமாள், பேராசிரியர் சிவசந்திரன், சி.வி.கே.சிவஞானம், எம்.கே.சிவாஜிலிங்கம், த.சித்தார்த்தன் ஆகியோர் கலந்துகொண்டு அமரர் அமிர்தலிங்கத்தின் ஆற்றல், ஆளுமையை வெளிப்படுத்தி உரை நிகழ்த்தினர்.





புனரமைக்கப்பட்ட, பூநகரி, நாகதேவன்துறை வீதியை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ கடந்த திங்கட்கிழமை திறந்து வைத்தார். (112)

# 13 போகங்களுக்குத் தொடர்ச்சியாக உரமானியம் வழுங்கி அரசு சாதனை

## தேசிய உரசெயலகப் பணிப்பாளர்

(கொழும்பு)

பதின்மூன்று போகங்கள் தொடர்ச்சியாக உரமானியம் வழங்கி உலகில் சாதனை படைத்த ஒரேநாடு இலங்கைதான் என்று தேசிய உர செயலகத்தின் பணிப்பாளர் ரஞ்சன் தர்மவர்தன நேற்று முன்தினம் தெரிவித்தார்.

நெற்செய்கை உள்ளிட்ட சகல பயிர்ச் செய்கைக்காகவும் உரமானியம் வழங்கவென அரசாங்கம் வருடத்திற்கு 52ஆயிரத்து 560 மில்லியன் ரூபாவை செலவிடுவதாகவும் அவர் குறிப்பிட்டார். உரமானியம் ஒருபோதும் இடைநிறுத்தப்படமாட்டாது. அரசாங்கம் உரமானியத்தை ஒரு முதலீடாகவே நோக்குவதாகவும் அவர் கூறினார்.

2005ஆம் ஆண்டில் மகிந்த சிந்தனையில் அறிவித்தபடி நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்கப்படுகிறது. 50கிலோ எடையுள்ள யூரியா, டி.எஸ்.பி., எம்.ஓ.பி. போன்ற பசளைகள் 350 ரூபாபடி மானிய அடிப்படையில் தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றது.

2005ஆம் ஆண்டு முதல் 13 போகங்கள் தொடர்ச்சியாக 350 ரூபாவுக்கு அரசாங்கம் உரத்தை மானியமாக வழங்கியுள்ளது. உலகில் வேறுஎந்தவொரு நாடும் இவ்வாறு உரமானியம் வழங்கவில்லை. அரசாங்கம் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மாத்திரம் உரமானியம் வழங்கவென வருடத்திற்கு 34 ஆயிரத்து 560 மில்லியன் ரூபாவை செலவிடுகின்றது. நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு உரமானியம் வழங்க ஏற்படும் செலவில் 90 சதவீதத்தை அரசாங்கமே பொறுப்பெடுத்திருக்கின்றது. எஞ்சிய பத்து வீதச் செலவையே விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்.

கடந்த மே மாதம் முதல் மரக்கறி, பழச்செய்கை உள்ளிட்ட சகல பயிர்ச்செய்கைக்கும் உரமானியம் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக உரமானியத்திற்கென மேலதிகமாக 18 ஆயிரம் மில்லியன் ரூபாவை அரசாங்கம் செலவிடுகின்றது. நெற்செய்கையைத் தவிர்ந்த ஏனைய பயிர்ச் செய்கைகளுக்குரிய பசளையை திறந்த சந்தையில் மானிய விலையில் பெற்றுக் கொள்ள முடியும். 50 கிலோ எடை கொண்ட ஒரு மூடை பசளையை 1200 ரூபாபடி பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விவசாயிகளுக்கான உரமானிய செலவில் 65 சதவீதத்தை அரசாங்கம் பொறுப்பெடுத்துள்ளது.

அரசாங்கம் உரமானியத்தை ஒரு முதலீடாகவே பார்க்கின்றது. மாறாக அதனைச் செலவாக நோக்கவில்லை. தேசிய பசளைச் செயலகத்தின் ஊடாக இறக்குமதி செய்யப்படுகின்ற சகல உர வகைகளும் மூன்று சந்தர்ப்பங்களில் தர சோதனைக்குட்படுத்தப்படுகின்றன என்றார்.

# யாழ். மாவட்டத்தில் தேர்தலைக் கண்காணிக்க மனித உரிமை குழுவை அனுப்பக் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை கண்காணிப்பதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு உத்தியோகஸ்தர்களை அனுப்ப வேண்டும் எனத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் தேர்தல் விதிகளை மீறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருப்பதாக எதிர்க்கட்சிகள் முறைப்பாடு செய்வதாகவும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுவரை தேர்தல் விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக 18 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இந்தத் தேர்தல் ஒரு தேசிய தேர்தல் போன்ற தன்மையை பெற்றுவருகிறது.

இத்தேர்தல் அரசாங்கத்தின் கொள்கைகள் தொடர்பான யாழ். மக்களின் கருத்தை அளவிடுவதற்கான ஓர் அக்கினிப் பரீட்சையாகும். இது ஒரு மினித் தேர்தலாக இருந்த போதிலும், அரசாங்கத்திற்கு முக்கியமானதாகும்.


தேர்தல் பிரசாரங்களை மேற்கொள்ள முடியாமல் இருப்பது குறித்து ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமிருந்து நாம் பல முறைப்பாடுகளைப் பெற்றுள்ளோம்.

சூழ்நிலையைக் கண்காணிப்பதற்காக அங்கு ஒரு குழுவை அனுப்புமாறு மனித உரிமைகள் ஆணைக குழுவுக்கு நாம் எழுத்து மூலம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

நாமும் அங்கு விசேட குழுவொன்றை கண்காணிப்பில் ஈடுபடுத்துவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.



# வடக்கின் வசந்தம்



## பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

மகிந்த சிந்தனையின் "வடக்கின் வசந்தம்" வேலைத்திட்டத்தின் கீழ் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பின்வரும் வேலைத்திட்டங்கள் 15.07.2011 அன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ பசில் ராஜபக்ச அவர்களினாலும் பாரம்பரிய கைத்தொழில், சிறு தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களினாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.






**1. நீர்ப்பாசனம்**

- ரூ.13.0 மில்லியன் மதிப்பீட்டில் நாவற்குழி - கோப்பாய் உவர் நீர்த்தடுப்பணை புனரமைப்புத் திட்டம் ஆரம்பித்து வைக்கபட்டது.
- அரியாலை தடுப்பணை வேலைத் திட்டம் ரூ. 113.5 மில்லியன் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

**2. நீர் வழங்கல்**

சாவகச்சேரி, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் பின்வரும் குடிநீர் விநியோகத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

| இல. | திட்ட விபரம் | பயனாளிகள் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|
| 1. | தென்மராட்சி பிரதேச சபை பிரிவில் சரசாலை பிரதேசத்திற்கான வேம்பிராய் குடிநீர் விநியோகத் திட்டம் | 2000 | ரூ. 5 மில்லியன் |
| 2. | வல்வெட்டித்துறை நகரசபை பிரிவில் குழாய்நீர் விநியோகத் திட்டம் | 1000 | ரூ. 250 மில்லியன் |










**3. வீதி அபிவிருத்தி நிர்மாணப் பணிகள்**

- 17 கி.மீ. நீளமான நாவற்குழி - கேரதீவு வீதியின் புனர்நிர்மாணப் பணிகள் ரூ.1030 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட 9.8 கி.மீ. நீளமான 10 வீதிகளை காப்பற் வீதிகளாக புனரமைப்புச் செய்யும் வேலைத்திட்டம் ரூ. 193 மில்லியன் மதிப்பீட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டப் பணியாக 1.5 கி.மீ. நீளமான 1வது மைல்கல் வீதி காப்பற் வீதியாக அமைக்கும் பணி ரூ.22 மில்லியன் செலவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.




**4. உள்ளூராட்சித் திணைக்கள சேவைகள்**

சாவகச்சேரி நகரசபைப் பிரிவில் 1.5 கி.மீ. நீளமான கல்வயல் இராமலிங்கம் பழைய பாடசாலை வீதியின் புனரமைப்புப் பணிகள் ரூ. 7.5 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

**5. கடற்றொழில் சேவைகள்**

பொலிகண்டி கிழக்கு கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி வள்ளங்களை பாதுகாப்பான முறையில் நிறுத்துவதற்கான வான் ஆழமாக்கும் நிகழ்வு பொலிகண்டியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



**6. "திவி நெகும" திட்டப் பயன்கள்**

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி நன்மை பெறும் பயனாளிகள் பல்வேறு உதவிகளை "திவி நெகும" திட்டத்தில் பெற்றுக் கொண்டனர்.

**7. சமுர்த்தி உதவித் திட்டப் பயன்கள்**

மனைப் பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வீட்டுத் தோட்ட பயனாளிகளுக்கு விவசாய உள்ளீடுகள் விநியோகிக்கப்பட்டன.



**8. மீள் எழுச்சித் திட்டப் பயன்கள்**

சாவகச்சேரி, தெல்லிப்பளை, பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுகளில் விவசாய, மீன்பிடி மற்றும் கல்வி துறைகள் தொடர்பான பல்வேறு வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

- திருவரம் பழரச தொழிற்சாலைப் பணிகள் ரூ. 1.24 மில்லியன் மதிப்பீட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
- யா/குட்டியப்புலம் அ.மி.த.க. பாடசாலை விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. இதன் மதிப்பீடு ரூ. 6.56 மில்லியன் ஆகும்.
- விவசாயிகளுக்கு ரூ. 4.39 மில்லியன் பெறுமதியான 50 நீர்ப்பம்பிகள், 37 தெளிகருவிகள் என்பன வழங்கப்பட்டன.
- மீனவர்களுக்கு ரூ. 1.63 மில்லியன் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன.
- பாடசாலை மாணவர்களுக்கு ரூ. 1.0 மில்லியன் பெறுமதியான 90 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டன.

(C/543)

# மும்பையில் நிகழ்ந்த குண்டுவெடிப்புச் சம்பவம் அரசின் கொள்கையின் தோல்வியைக் காட்டுகிறது

## சாடுகிறார் பா.ஜ.க.மூத்த தலைவர் அத்வானி



(மும்பை)

மும்பையில் நடந்த குண்டு வெடிப்பு சம்பவங்கள், மத்திய அரசின் ஒட்டு மொத்த கொள்கை முடிவுகள் தோல்வி அடைந்ததைப் பிரதிபலிப்பதாக பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானி கூறியுள்ளார்.

பா.ஜ.க. தலைவர் அத்வானி, குண்டு வெடிப்பு நடந்த இடங்களைப் பார்வையிடுவதற்காக நேற்றுமுன்தினம் மும்பை சென்றார்.

விமான நிலையத்திலிருந்து நேரடியாக ஜவேரி பஜார் சென்று, குண்டு வெடிப்பு நடந்த இடத்தைப் பார்வையிட்டார்.

இதன்பின், ஒபேரா விடுதி சென்று, அங்கு ஏற்பட்ட பாதிப்பையும் பார்வையிட்டார். ஜி.டி. மருத்துவமனை, ஜே.ஜே. மருத்துவமனை ஆகியவற்றுக்குச் சென்று, குண்டு வெடிப்பில் காய மடைந்தவர்களைச் சந்தித்து, ஆறுதல் கூறினார்.

பின்னர் அவர் நிருபர் களிடம் உரையாற்றுகையில்,

மும்பையில் தற்போது நடந்து முடிந்த தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள், உளவுத் துறைத் தோல்வியால் ஏற்பட்டது என்று கூற முடியாது. இது அரசாங்கத்தின் ஒட்டுமொத்த கொள்கை முடிவுக்கான தோலவி என்றே கூறவேண்டும்.

பயங்கரவாதம் தொடர்பான விடயத்தில், தனது இரண்டு விதமான மனப்போக்கை, மத்திய அரசு கைவிடவேண்டும்.

பயங்கரவாதத்தை இனி மேலும் சகித்துக் கொள்ள முடியாது என்ற அளவுக்கு, கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தத் தாக்குதலுக்கு, இந்தியன் முஜாகுதீன் அமைப்புத்தான் காரணம் என, சிலர் கூறுகின்றனர். அப்படியானால், குண்டு வெடிப்புகளை நிகழ்த்துவதற்கான உதவிகளை, பாகிஸ்தானிடம் இருந்து அவர்கள் பெற்ற னரா? என அத்வானி கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்தியச் செய்திகள்

# 89 ஈழத்தமிழர்களை காப்பாற்றுங்கள் மன்மோகன்சிங்கிடம் வைகோ கோரிக்கை

(சென்னை)

இந்தோனேஷிய கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ள 89 ஈழத்தமிழர்களைக் காப்பாற்றுங்கள் எனப் பிரதமருக்கு, வை.கோ கடிதம் எழுதியுள்ளார். பிரதமருக்கு, ம.தி.மு.க., பொதுச் செயலர் வை.கோ அனுப்பிய கடிதத்தில் கூறியிருப்பதாவது-

இந்தோனேஷிய கடற்படை, ஈழத்தமிழர்களைத் தடுத்து, கைது செய்து, இலங்கைக்கு திருப்பி அனுப்ப முயற்சிக்கிறது. அவர்கள் சட்டவிரோதமாகக் குடியேற வரவில்லை. பன்னாட்டு சட்டத்தின் கீழ், அகதிகளாக தஞ்சம் கேட்கும் உரிமையை, இந்தோனேஷியா அரசு தடுக்க முடியாது.

இந்தோனேஷிய அரசின் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, 89 அப்பாவித் தமிழர்களும் கப்பலை விட்டு இறங்க மாட்டோம் என போராடி வருகின்றனர். இந்திய அரசு, இந்தோனேஷிய அரசுக்கு அழுத்தம் கொடுத்து, ஈழத்தமிழர்கள் பயணம் தொடர வகை செய்ய வேண்டும் என வை.கோ தெரிவித்துள்ளார்.

# சாயிபாபா சமாதி திறப்பு பக்தர் கூட்டம் அலைமோதல்

(புதுடில்லி)

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மீகப் பணியில் ஈடுபட்ட சாயி பாபாவுக்கு அங்கு நேற்று சமாதி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதனைத் தரிசிக்க பெருமளவு பக்தர்கள் அலைமோதினர்.

சாயிபாபா கடந்த மே மாதம் மரணமடைந்தார். இதையடுத்து அவரது உடல் புட்டபர்த்தியில் உள்ள ஆசிரமத்தில் அடக்கம் செய்யப்பட்டு அந்த இடத்தில் சமாதி கட்டப்பட்டது. இதன்பின் அங்கு அவரது முழு உருவச் சிலை அமைக்கும் பணி நடந்து வந்தது.

இந்நிலையில் குரு பவுர்ணமியையொட்டி சாயிபாபா சமாதி திறக்கப்பட்டது. சமாதியை தரிசிக்க நாடு முழுவதிலும் இருந்து ஏராளமானோர் திரண்டு வந்தனர். இதனால் அங்கு கூட்டம் அலைமோதியது.

பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று சாயிபாபா சமாதியை தரிசித்தனர். பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் அங்கு ஏராளமான பொலிஸார் குவிக்கப் பட்டனர். அவர்கள் ஆசிரமத்தைச் சுற்றிப் பலத்த பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

# தமிழக முன்னாள் உளவுத்துறை அதிகாரி ஸ்பெக்ட்ரம் விவாகாரத்தில் சிக்கினார்

(புதுடில்லி)

2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் தமிழக முன்னாள் உளவுத்துறை அதிகாரி ஜாபர் சேட்டுக்கு தொடர்பு உள்ளதாக பரபரப்புத் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன.

முன்னாள் மத்திய அமைச்சர் ஆ.ராசா மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சரானதும், லஞ்சமாக ஏராளமான பணம், ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில் ஆதாயம் பெற்ற நிறுவனங்களால் கொடுக்கப்பட்டது.

இந்தப் பணத்தை தமிழகத்திற்குக் கொண்டு வந்தபோது அதனைப் பல்வேறு வழிகளில் முதலீடு செய்வதற்கு ஜாபர் உதவி புரிந்துள்ளதாகக் குற்றம் சாட்டப் படுகின்றது.

இதையடுத்து 2ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஜாபர் சேட்டுக்கு தொடர்புள்ளமை குறித்து சி.பி.ஐ. அதிகாரிகளும், மத்திய உளவுத்துறையினரும், மாநில உளவுத்துறை அதிகாரிகளும் விசாரணையை முடுக்கிவிட்டுள்ளதாகக் கூறப் படுகின்றது.

ஆனால், இந்தத் தகவலை ஜாபர் சேட் வட்டாரம் மறுக்கின்றது.

சட்டசபைத் தேர்தலுக்கு முன்பு வரை முன்னாள் உளவுத்துறை அதிகாரி ஜாபர் சேட் பெயரைக் கேட்டாலே தி.மு.க.வினர் முதல் உ'யர் காவல்துறை அதிகாரிகள் வரை அத்தனை பேரும் நடுங்குவார்கள்.

கருணாநிதியோடு பல வருட நட்புக் கொண்ட முன்னாள் அமைச்சர்களே ஜாபரைக் கண்டால் மிரட்சியாகத் தான் பார்ப்பார்கள்.

முன்னாள் முதல்வர் கருணாநிதியே கூட, எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் ஜாபரிடம் சொல்லும் அளவுக்கு முழுக்க முழுக்க கருணாநிதியின் நம்பிக்கையைப் பெற்று அவரின் கண்களாகவும், காதுகளாகவும் திகழ்ந்தவர்.

தேர்தல் அறிவிப்பு வெளி வந்ததும், ஜாபர் சேட் மீதான புகார்கள் தேர்தல் ஆணையத்தின் முன் குவியத் தொடங்கின.

ஜாபர் சேட்டை நேரில் வரவழைத்த ஆணையம், நேரடியாக விசாரணை நடத்தி, மேற்கு வங்கத்திற்கு பார்வையாளராகச் செல்லும்படி உத்தரவிட்டது. அதனை ஏற்க மறுத்த ஜாபர் சேட், விடுப்பில் சென்றார்.

அ.தி.மு.க. ஆட்சியைக் கைப்பற்றியதும், மண்டபம் அகதிகள் முகாமின் சிறப்பு அதிகாரியாக மாற்றப்பட்டார்.



இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கக்கோரி தமிழகம் ராசிபுரத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்றதைக் காணலாம்.

# மும்பை குண்டு வெடிப்பு விசாரணை இந்தியாவிற்கு உதவி வழங்கத் தயார்

## அமெரிக்க அரசு அறிவிப்பு

(மும்பை)

மும்பை குண்டு வெடிப்பு சம்பவங்களில் விசாரணை நடத்த இந்தியாவுக்கு உதவத் தயாராக இருப்பதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

மும்பைத் தாக்குதல் தொடர்பாக இந்தியா விசாரணை நடத்தி வருகிறது. அதற்கு நாங்கள் எங்களாலான உதவிகளைச் செய்யத் தயாராக உள்ளோம்.

எனினும், இந்தத் தாக்குதல்களுக்கு யார் காரணமாக இருக்க முடியும் என்பது தொடர்பாக எங்களிடம் தகவல் எதுவும் இல்லை என்று வெள்ளை மாளிகை ஊடகச் செயலர் ஜே.கார்னி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

மும்பை தாக்குதலில் பாகிஸ்தானுக்கு தொடர்பு இருப்பதற்கான அறிகுறி எதுவும் அமெரிக்காவுக்குத் தெரிகிறதா என வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் மார்க்டோனரிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, இந்தியா விசாரணை நடத்தி வருகிறது. விசாரணையில் என்ன தெரிய வருகிறது என்று காத்திருந்து பார்ப்போம் எனத் தெரிவித்தார்.

# மீண்டும் நெருக்கடியில் நடிகர் வடிவேலு இணையத்தள ஆசிரியர் மோசடிப்புகார்

(சென்னை)

நடிகர் வடிவேலு மீது பொலிஸ் அதிகாரியிடம் மோசடி புகார் அளிக்கப்பட்டுள்ளது.

நடிகர் வடிவேலு சார்பில் அவரது மேலாளர் பொலிஸ் அதிகாரியிடம் இரு தினங்களுக்கு முன்பு இணையத்தள ஆசிரியர் செல்வகுமார் மீது புகார் அளித்தார். அதில் வடிவேலுவிடம் ரூபா 45 லட்சம் கேட்டு மிரட்டுவதாக குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் வடிவேலு மீது இணையத்தள ஆசிரியர் செல்வகுமார் மோசடிப் புகார் அளித்துள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது, நடிகர் வடிவேலு மலேசியாவில் நடந்த நட்சத்திரக் கலை விழாவுக்கு வருவதாக முற்பணம் பெற்றார். 2007 ஆம் ஆண்டு மலேசியாவைச் சேர்ந்த மைக்கல் கானாவிடம் ரூபா 4 லடசம் வாங்கினார். அந்தப் பணத்தை இன்று வரை திருப்பித் தராமல் ஏமாற்றி வருகிறார்.

இந்தியத் தூதரகம் மூலமும் வடிவேலுக்கு பல கடிதங்கள் அனுப்பப்பட்டன. அப்போதைய முதல்வர் கருணாநிதிக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. ஆனாலும் பயனில்லை. கலை நிகழ்ச்சிக்கு வடிவேலு போகாததால் ரூபா 1 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, வடிவேலு மீது புகார் அளிக்க எனக்கு பொது அதிகாரப் பத்திரம் வழங்கப்



பட்டுள்ளது. அதன் அடிப்படையில் புகார் அளிக்கிறேன் என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திரிபோலியை அழிக்க கடாபி திட்டம் ரஷ்ய சிறப்பு தூதுவர் திடுக்கிடும் தகவல்

(திரிபோலி)

லிபியா தலைநகர் திரிபோலியை, கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினால், ஏவுகணை தாக்குதல் நடத்தி, அந்நகரை அழிக்க கடாபி திட்டமிட்டுள்ளார். கடாபியிடம் இன்னும் ஏராளமான ஆயுதங்கள், ஏவுகணைகள் உள்ளன. இதுவரை நடந்த தாக்குதல்களில், ஏவுகணைகளை கடாபி பயன்படுத்தவில்லை, என, லிபியாவுக்கான ரஷ்யாவின் சிறப்பு தூதர் மிக்கெயில் மர்கெலோவ் கூறினார்.

லிபியா தலைவர் கடாபிக்கு எதிராக, அந்நாட்டில் கிளர்ச்சி நடக்கிறது. நேட்டோ படைகளுடன் சண்டையிட்டு வரும் லிபியா அரசுக்கு, தற்போது பல வழிகளிலும் சிக்கல் எழுந்துள்ளது. கடாபிக்கு அளித்து வந்த ஆதரவை கடந்த, 4ஆம் திகதி, துருக்கி அரசு வாபஸ் பெற்றது. இதனால், கடாபிக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. துருக்கியில் உள்ள துருக்கி - லிபியா வங்கியில், லிபியா அரசின் பணம் வைப்பு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பணத்தை எடுக்க முடியாத சூழ்நிலை, கடாபிக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

அத்துடன், சமீபத்தில், லிபியா அரசின் முக்கிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு,எரிவாயு கொண்டு செல்லும் குழாய்களை, கிளர்ச்சியாளர்கள் குண்டு வைத்து தகர்த்தனர். இதனால், விரைவில் லிபியாவில் எரிபொருள் பற்றாக்குறை ஏற்படும் என்று, அமெரிக்க புலனாய்வு நிறுவனங்கள் கூறியுள்ளன. இந்



நிலையில், லிபியாவின் மேற்கில் உள்ள குவாலி நகரை, கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றினர்.

இதற்கிடையில், லிபியாவிற்கான ரஷ்யாவின் சிறப்பு தூதர் மிக்கேல் மெர்கெலோவ் அதிர்ச்சி தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த விபரம் ரஷ்ய பத்திரிகை ஒன்றில் வெளியாகியுள்ளது. அதில், மெர்கெலோவ், லிபியா தலைநகர் திரிபோலி, கிளர்ச்சியாளர்கள் கையில் வீழ்ந்தால், தற்கொலைப் படைத் திட்டம் ஒன்றை செயல்படுத்த, கடாபி திட்டமிட்டுள்ளார்.

அதாவது, நகரை சுற்றியுள்ள பகுதிகளிலிருந்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தி, திரிபோலியைத் தகர்க்க திட்டமிட்டுள்ளார். இதை, கடாபியே என்னிடம் தெரிவித்தார். கடாபி இதுவரை ஏவுகணைகள் எதையும், கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக பயன்படுத்தவில்லை, என்றார்

## உலகச் செய்திகள்

## ஐ.நா.வில் தெற்கு சூடான் பாதுகாப்புக்குழு பரிந்துரை

(நியூயோர்க்)

தெற்கு சூடான் நாட்டை, ஐ.நா.வின் உறுப்பு நாடாக இணைக்க பாதுகாப்புக் குழு பரிந்துரைத்துள்ளது. சூடானிலிருந்து, கடந்த 9ஆம் திகதி தெற்கு சூடான் தனிநாடாக பிரிந்தது. இந்நாட்டை, ஐ.நா., வின் உறுப்பு நாடாக சேர்ப்பதற்கு 15 நாடுகள் கொண்ட ஐ.நா. பாதுகாப்புக் குழு வாக்கெடுப்பு நடத்தாமல், பரிந்துரை செய்துள்ளது. இதன் மூலம், ஐ.நா. வின் 193ஆவது உறுப்பு நாடாக தெற்கு சூடான சேர்க்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கடந்த 2006ஆம் ஆண்டில், மான்டிநீக்ரோ இறுதியாக ஐ.நா. உறுப்பு நாடாக இணைக்கப்பட்டது. தைவான் மற்றும் கோசோவா நாடுகள் இணைய, வீட்டோ அதிகாரம் கொண்ட ரஷ்யா மற்றும் சீனா எதிர்ப்பு தெரிவித்ததால், இந்நாடுகள் சேர முடியவில்லை. தெற்கு சூடான் பற்றி, ஐ.நா. பாதுகாப்புக் குழுவில் பேசிய ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன், உலகிலேயே, மனித வளர்ச்சி தொடர்பான அனைத்து குறியீடுகளிலும், தெற்கு சூடான் பின்னணியில் உள்ளது என்றார்.

## தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்தாலே இராணுவ உதவி

### - அமெரிக்க வெளியுறவு அமைச்சர் கிலாரி எச்சரிக்கை

(வொஷிங்டன்)

தீவிரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தான் கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே அந்நாட்டிற்கு இராணுவ உதவிகள் வழங்கப்படும் என்று அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கிலாரி கிளிண்டன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானுக்கும், அமெரிக்காவுக்குமிடையே நல்லுறவு இருந்து வருகிறது. அது தொடர்ந்து நீடிக்க வேண்டுமென்றே இரு நாடுகளும் விரும்புகின்றன. ஆனால் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் விட்டுக் கொடுக்கும் பேச்சுக்கே இடமில்லை.

இதனால் தான் பாகிஸ்தானுக்கு அளிபபதாக உறுதி அளித்த இராணுவ ரீதியான உதவிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இந்த வகையில் .3,600 கோடி ரூபா மதிப்பிலான இராணுவ உதவி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் கிலாரி கிளிண்டன் தெரிவித்தார்.



பிரான்ஸ் தலைவர் பாரிசில் 1789இல் அழிக்கப்பட்ட பாரிஸ் நகரத்து சிறைக்கோட்டத்தை நினைவு கூரும் விதமாக நடந்த அணிவகுப்பில் அந்நாட்டு அதிபர் நிக்கோலஸ் சர்கோசி (நடுவில்) பிரதமர் பிரான்கோசிஸ் (வலது) மற்றும் அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

## இராணுவமுகாமில் அணுஆயுதக் குவிப்பு ஜேர்மன் அரசு மீது வழக்குத்தாக்கல்

மேற்கு ஜேர்மனியில் உள்ள இராணுவ மையத்தில் அதிக அளவு அணு ஆயுதங்கள் குவிக்கப்பட்டு உள்ளன. இந்த அணு ஆயுதங்கள் உடனடியாக அகற்றப்பட வேண்டும் என ஆர்வலர் ஒருவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. ரைனே லேண்ட் பாலடினேட் இராணுவ மையத்தில் ஏறக்குறைய 20 அணு வெடி குண்டுகள் உள்ளன என்று வழக்கு தொடர்ந்த இப்படி அணு ஆயுதங்களை குவிப்பது ஜேர்மனியின் அடிப்படைச் சட்டத்திற்கு எதிரானது எனத் தெரிவித்தார்.

ஜேர்மனி அரசு மீது வழக்குத் தொடர்ந்துள்ள கோலர் ஓய்வு பெற்ற மருந்தாளுனர் ஆவார். அவர் கடந்த 2010ஆம் ஆண்டு ஏப்ரல் 10ஆம் திகதி பெடரல் அரசு மீது வழக்கு தொடர்ந்தார். நாட்டில் குவித்து வைக்கப்பட்டுள்ள அணு ஆயுதங்கள் யாருடையதாக இருந்தாலும் உடனடியாக அகற்ற வேண்டும் என அவர் கூறினார். ஜப்பான் ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணு குண்டு தாக்கத்தை விட 13 மடங்கு சக்தி வாய்ந்த அணு குண்டுகள் 10 முதல் 20 வரையில் ஜேர்மனியில் உள்ளன. இந்த அணு குண்டுகள் எபல் பிராந்தியத்தில் மலைப்பகுதிக்கு கீழே பாதாள அறை பகுதியில் உரிய பாதுகாப்புடன் உள்ளன.

இந்த இடம் பெல்ஜியம் எல்லைக்கு அருகாமையில் உள்ளது. ஐரோப்பா அவசர நிலையின் போது அமெரிக்க அணு ஆயுதங்களை எடுத்து செல்ல ஜேர்மனியின் அதி வேக போர் விமான மையமும் உள்ளது.அணு ஆயுதங்கள் உள்ள இடத்தில் இருந்து வழக்கு தொடர்ந்துள்ள கோலர் என்பவரின் வீடு 4 கிலோ மீற்றர தொலைவில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## இந்தோனேஷியாவில் எரிமலை வெடிப்பு பெருமளவு மக்கள் வெளியேற்றம்

இந்தோனேஷியாவில் சுலேவெய்ஸி மாகாணத்தில் எரிமலை ஒன்று வெடித்து சிதறியதால் அப்பகுதியில் வாழும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவின் சுலேவெய்ஸி மாகாணத்தின் வடக்கு பகுதியில் உள்ள லூக்கோன் எனும் எரிமலை நேற்றுமுன்தினம் இரவு 10.50 மணியளவில் வெடித்து சிதறி புகையுடன் கூடிய தீச்சுவாலையுடன் காணப்படுகிறது.

இதனால் அப்பகுதியில் வசிப்பவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக இந்தோனேஷியா பேரிடர் மேலாண்மை தலைவர் பிரெய்ன்லோர்லா தெரிவித்தார்

## பெண்டகன் மீது பாரிய சைபர் தாக்குதல் 24000 கோப்புக்கள் களவாடப்பட்டது

(வொஷிங்டன்)

அமெரிக்கப் பாதுகாப்புத் தலைமையகமான பென்டன் மீது பாரிய சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக அந்நாட்டு பிரதிப் பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் லியன் தெரிவித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதம் இந்த பாரிய சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.வெளிநாட்டு ஹெக்கர்களினால் முக்கிய கணினி வலையமைப்பு தாக்கப்பட்டதாகவும் ஆயிரக்கணக்கான கோப்புக்கள் மற்றும் முக்கிய தரவுகள் களவாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்பு தொடர்பான மிகவும் முக்கிய இரகசிய தகவல்களும் களவாடப்பட்டுள்ளதாக அவர் முதல் தடவையாக ஒப்புக் கொண்டுள்ளார். வான், தரை மற்றும் கடல் பாதுகாப்புக்களைப் பலப்படுத்த அமெரிக்கா எடுத்து வரும் அதேயளவு முனைப்பு சைபர் பாதுகாப்பு தொடர்பிலும் காட்டப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். வொஷிங்டன் பாதுகாப்புப் பல்கலைக



கழகத்தில் ஆற்றிய உரையின் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

பென்டகனின் 24000 கோப்புக்கள் இவ்வாறு களவாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வெளிநாட்டு அரசாங்கமொன்றினால் இந்த சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் எந்த நாட்டினால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்பது தமக்கு தெரியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.அமெரிக்க கணினி வலையமைப்புக்களை ஊடறுத்து தகவல்கள் திருடப்படக்கூடிய அபாயம் தொடர்ந்து நிலவி வருவதாக அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்


## பட்டினியால் பரிதவிக்கும் ஆபிரிக்கர்களுக்கு உதவி புரியுமாறு கனடாவிடம் கோரிக்கை

(ரொரன்ரோ)

பட்டினியில் பரிதவிக்கும் ஆப்பிரிக்க மக்களுக்கு கனடா பெரும் உதவிகளை அளிக்க வேண்டும் என தொண்டு நிறுவனங்களும், அகதிகள் நிவாரண உதவியாளர்களும் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.சோமாலியாவில் உணவு மட்டுமல்ல தண்ணீரும் கிடைக்கவில்லை. இலட்சக்கணக்கான சோமாலிய மக்கள் அருகாமையில் உள்ள நாடுகளுக்கு இடம்பெயர்ந்து வருகிறார்கள்.குறிப்பாக அவர்கள் கென்யா நாட்டிற்கு அதிகம் இடம் பெயர்ந்து உள்ளனர். ஆபிரிக்க வரட்சி பாதிப்புக்கு உதவி செய்யும் வகையில் கனடா ஏற்கனவே 115 இலட்சம் டொலர் நிதி உதவி செய்து உள்ளது.வரட்சியில் வாடுவோர்க்கு உதவ கென்யாவில் உள்ள தாதாப் பகுதியில் மிகப்பெரும் முகாம் கடந்த 20 ஆண்டுகளாக உள்ளது. இந்த முகாமில் கேர் கனடா தொண்டு நிர்வாகம் நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது குறிப்பிடத்தக்கது.

# நாடாளுமன்ற தெரிவுக்குழு ஆலோசனைகளும் அதற்கு அப்பாலும் ...

எதிர்பார்த்தவாறே, முடிவுக்கு வராத இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வையும் அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாட்டையும் அடைவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழு ஒன்றை அமைப்பது கவனத்தைத் திசை திருப்பும் நோக்கத்தை கொண்டதல்லவென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். இது உண்மையாயின்



அரசாங்கம் இன்னும் செய்யவேண்டிய விடயங்கள் அதிகம் உள்ளன. இது உண்மையில்லை எனின் எதையும் கொடுக்க மறுக்கும் நிலைக்கு அரசாங்கம் பின்வாங்குவதாகவே கொள்ள வேண்டும். இதன் விளைவுகள் பாரதூரமாகப் போய்விடும் என்பது மறுக்க முடியாததாகும்.

நாடாளுமன்றம் சட்டத்தின் இறுதி தீர்ப்பாளராகவும், யாப்புத் திருத்தங்களின் பிறப்பிடமாகவும் இருப்பதனால் நாடாளுமன்ற தெரிவுக் குழுவே இயல்பான மார்க்கமாக இருக்கமுடியும் என அரசாங்கம் கூறுவதில் உண்மையுள்ளது. நாடாளுமன்ற தெரிவுக்குழு, தீர்க்க வேண்டிய பிரச்சினைகளை ஒவ்வொன்றாக கவனிக்கப் போகின்றதா அல்லது சூனியவெளியில், சட்டத்திருத்தங்களையும் யாப்புத் திருத்தங்களையும் வரையப் போகின்றதா என்பதுவே முடியாத கேள்வியாகும்.

இந்த கேள்விக்கு பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பதிலளித்துள்ளார். நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டதும் அரசாங்கம் தனது ஆலோசனைகளை அதனிடம் சமர்ப்பிக்கும் என அவர் கூறியுள்ளார். இந்த ஆலோசனைகள் அரசாங்கத்திலுள்ளோரின் பெரும்பான்மையினரால் ஆதரிக்கப்படுவதாக இருக்குமா அல்லது பெரும்பான்மையினால் தீர்மானிக்கப்பட்டதாக இருக்குமா என்னும் கேள்வி எழுகின்றது.

இநதக் கட்டத்தில்கூட, அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் (APRC) திஸ்ஸவிதாரண அறிக்கையை அரசாங்கம் தனதாக வரித்துக் கொள்ள முடியும். APRC இன் அமர்வுகளை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி பகிஷ்கரித்திருந்தாலும் அதற்கு இந்த ஆலோசனைகள் தொடர்பில் தயக்கமோ அல்லது பயமோ இருப்பதாக தெரியவில்லை. ஒற்றையாட்சி முறையோடு இந்த ஆலோசனைகள் நின்றுவிடுவதால் சிங்கள தேசியவாதிகளின் அடிப்படையான பயத்தையும் தீர்க்கும் வகையில் அமைந்துள்ளன. இதைவிட வேறென்ன தேவை.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, முஸ்லிம்கள், ஜாதிக ஹெல உறுமய ஆகியன உட்பட ஏனைய பங்குதாரர்களும், வேறு வரைவுகளை கொண்டிருக்கலாம். வேறு சிலர் புதிய கருத்துக்களை கொண்டிருக்கலாம். நாடாளுமன்ற தெரிவுக் குழு அரசாங்கத்தின் ஆலோசனைகளை ஆராய்வது போல இவற்றையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்வாறான ஒரு குழு நல்ல பயனைத் தருவதற்கு காலவரையறை ஒன்று அவசியமானதாகும்.

சண்டைக்குப் பிந்திய நிலைமையில் உருவாகிவரும் விசைகள், முன்பு கொடுக்க முன்வந்ததை மறுப்பதற்கு காரணமாகிவிடக் கூடாது. புதிய கருத்துக்களும், குறிப்பான விடயங்களுக்காக தீர்வுகளும் ஒவ்வொரு கட்டத்திலும் கருத்தில் எடுக்கப்பட வேண்டும்.

முப்பது வருட யுத்தத்திற்கும் அதன் பின்விளைவுகளுக்கும் ஓரிரு நாட்களில் தீர்வு காணமுடியாது. சில பிரச்சினைகள் தமது பாட்டிலேயே மறைந்துவிடும். முன்னைய காலத்தில் நடந்தது போலவே ஏனைய பிரச்சினைகள் தொடர்ந்து நீடிக்கும். இவற்றின் முன்னுரிமை, நிலைத்திருக்கக் கூடிய காலம் என்பன பற்றி குழம்பிக்கொள்ளக் கூடாது.

அதிகாரப் பகிர்வு பற்றிய தமிழ் தேசியக் கூட்டமைப்பினுடனான பேச்சுவார்த்தையின் தொடக்கத்தில், அரசாங்கக் குழுவின் தலைவராக, இறுக்கமான போக்குள்ளவர் என கருதப்பட்ட முன்னாள் பிரதமர் ரட்னசிறி விக்கிரமநாயக்கவை ஜனாதிபதி மஹிந்த நியமத்திருந்தார். பின்னர் தாராண்மைவாதியான ரஜீவ விஜயசிங்க இவரிடத்திற்கு நியமிக்கப்பட்டார்.

எதிர்க்கட்சியான ஐ.தே.க. எப்போதும் போலவே தமிழர்களும் அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளும் எந்த தீர்வையும் தான் ஆதரிப்பதாக கூறியுள்ளது. தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வராத ஒரு காலத்தில் ஐ.தே.க அதிகாரப் பரவலாக்கலை மறுத்துச் செயற்பட்டது. சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தின் சில குறிப்பிட்ட பிரிவுகளை பிரித்தெடுத்து எதிர்ப்பதற்கு பதிலாக சட்டமூலம் முழுவதையும் ஐ.தே.க. நாடாளுமன்றத்தில் எரித்தனர்.

ஜாதிக ஹெல உறுமய ஆளும் கூட்டணியில் உள்ளது. அது அரசியல் தீர்வு ஒன்று தேவை எனக் கூறினாலும் அதிகாரப் பகிர்வு தேவையில்லை என கருதுகின்றது. எல்.ரீ.ரீ.ஈ.யின் வருகைக்கு முன் இலங்கைத் தமிழர்களுக்கு குறைபாடுகள் இருக்கவில்லை என அது தொடர்ந்து கூறி வருகின்றது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எல்.ரி.ரி.ஈ.யின் தரகராக தொடர்ந்தும் செயற்படுவதாக இந்தக் கட்சி கூறிவருகின்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பை தமிழ் பேசும் மக்களின் ஏகப்பிரதிநிதியாக தான் ஏற்கவில்லை என அரசாங்கம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திய போதிலும், ஜாதிக ஹெல உறுமய இதை நம்புவதாக இல்லை. வடக்குத் தமிழர்கள், தேர்தல்களில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு சார்பாக இருக்கின்றனர் என்பதும் உண்மை. நிதர்சனமான இந்த விடயத்தை ஜாதிக ஹெல உறுமய ஏற்றுக்கொள்ள மறுத்து வருகின்றது.

ஜே.வி.பி. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவேண்டுமென விரும்புகிறது. கடந்த சில மாதங்களாக இக்கட்சியின் தலைவர்கள் போரினால் சிதைக்கப்பட்ட தமிழர்கள் வாழும் வடபகுதிக்கு அடிக்கடி சென்று வருகின்றனர். ஆயினும், இது நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் பங்குபற்ற விரும்பவில்லை. முன்னைய அனைத்துக்கட்சி பிரதிநிதிகள் குழுவிலும் இக்கட்சி பங்குபற்றவில்லை. எந்தவொரு தீர்வையும் முன்வைக்காத ஜே.வி.பி., வரக்கூடிய எந்த தீர்விலிருந்தும் கோழைத்தனமாக விலகியிருக்க விரும்புகிறது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படுமாயின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அதைப் பகிஷ்கரிக்கும் என கூறப்படுகிறது. அனைத்துக் கடசி பிரதிநிதிகள் குழுவில் பங்குபற்றுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அரசாங்கம் அழைக்கவில்லை. சிங்களப் பெரும்பான்மையினரின் ஒருமிதத கருத்து அடையப்பட்ட பின் இதன் அடிப்படையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேசலாம் என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது.

யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக் குழுவை, ஒரு பின்னோக்கிய நகர்வாக அல்லது மறுதலிப்பதாக கருதாமல் அதை ஒரு வாய்ப்பாக கருதவேண்டும். ஏகப் பிரதிநிதி என்ற கருத்தில் ஊன்றி நிற்பதனால் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தனது நியாயங்களை வலுப்படுத்த முடியாது. இந்த விடயத்தில் ஜாதிகஹெல உறுமயவின் பயத்தை சிங்கள அரசியல் சமுதாயம் மட்டுமன்றி வேறு பலரும் கொண்டுள்ளனர்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, தனக்கு வடக்கில் கிடைத்துள்ள தேர்தல் வெற்றிகளுக்கும் அப்பால் சென்று இந்த பயங்கள் அர்த்தமற்றவை என நிரூபிக்க வேண்டும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் சமுதாயத்தினுள் உள்ள அரசியல பெரும்பான்மை ஆதரவுக்கும், பெரும்பான்மை சமுதாயத்தினரின் உணர்வுகளுக்கும் இடையில்தான் உண்மை உள்ளது. இவை இரண்டுக்குமிடையில் சரியான சமநிலை எய்தப்பட வேண்டும்.

தேர்தலின்பின் அரசாங்கத்துடன் இணைந்து கொண்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அண்மைக் காலம்வரை முஸ்லிம்களின் கோரிக்கைகள் பற்றி தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் பேசிக்கொள்ளும் எனக் கூறிவந்தது. இப்போது அவர்கள் அரசாங்கம் தொடங்கியுள்ள பேச்சுவார்த்தையில் தம்மை மூன்றாம் தரப்பாக சேர்க்க வேண்டுமென கோருகின்றனர்.

மலைநாட்டுத் தமிழர்களின் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும் வித்தியாசமானவை என ஏற்றுக்கொள்வதற்தகு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தயங்கிவிடக்கூடாது. எவ்வாறாயினும், இறுதியாக இனத்துவ மற்றும் சமூக பொருளாதார பிரச்சினைகளுக்கு ஒட்டுமொத்தமான தீர்வை இலங்கை காணவேண்டியிருக்கும். இதற்குத் தயாராக இருக்கும் வகையில் அணுகுமுறை மாற்றம், சட்டத் திருத்தங்கள், யாப்பு திருத்தங்கள் என்பவற்றை இப்போதே தேவைக்கேற்ப யாப்பு செய்து கொள்ள வேண்டும். திஸ்ஸ விதாரண அறிக்கை இவ்வாறான பிரச்சினைகள் பற்றி ஆலோசனைகளை முன்வைத்துள்ளது.

அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் குழுவின் சிபாரிசுகளுக்கு ஐ.தே.க, ஜே.வி.பி, தமிழ்த்தேசிய கூட்டமைப்பு என்பன பங்குதாரர்களாக இல்லாத போதிலும், இந்தச் சிபாரிசுகள் பேச்சுவார்த்தைகளுக்கான அடிப்படை ஆவணமாக்கப்படுமாயின், இந்தக் கட்சிகள் தமது அபிப்பிராயத்தை நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கூறவேண்டி

**யுத்தம் முடிவுக்கு வந்துள்ள நிலையில், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற தெரிவுக்குழுவை, ஒரு பின் னோக்கிய நகர்வாக அல்லது மறுதலிப்பதாக கருதாமல் அதை ஒரு வாய்ப்பாக கருதவேண்டும்.**


யிருக்கும். அரசாங்கமும் நடைபெறும் பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள அல்லது ஏற்படாத முன்னேற்றங்கள் பற்றி நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு அறிவிக்க முடியும்.

அரசாங்கத்திற்கு யாப்பு திருத்தம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு அவசியமான மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ளது. வாக்கெடுப்பு தேவைப்படும் அரசியல் பொதியொன்றில் அரசாங்கம் சிறுமாற்றங்களை செய்ய வேண்டியிருக்கும். அல்லது ஏற்கக் கூடியதொரு தீர்வு நாடாளுமன்றத்தில் அங்கீகரிக்க செய்யவும் ஒப்பங்கோடலில் மக்களின் ஆதரவை பெறவும் அரசாங்கம் அரசியலில் சிறு மாற்றங்களைச் செய்ய வேண்டும். இதற்குப் புதிய சிந்தனைகளும் முன்னெடுப்புகளும் அவசியமானவை. இதனால் வரும் நன்மை நாட்டுக்கும் மக்களுக்கும் தொடர்புபட்ட அரசியல் சமுதாயத்திற்கும், தலைவர்களுக்கும் பெறுமதி வாய்ந்ததாக அமையும். தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் இதை உணர்ந்து கொள்ளவேண்டும்.

**- என்.சத்தியமூர்த்தி**

# தேசிய அடையாள அட்டைக்கு முன்கூட்டியே விண்ணப்பிக்கலாம்

## கல்லூரி மாணவர்களுக்கு நீங்கியது சிரமம்




(கொழும்பு)

இந்த ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் திகதி அன்று 16 வயது பூர்த்தியாகும் மாணவர்கள் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை முன்கூட்டியே சமர்ப்பிக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள குறித்த மாணவர்கள் 16 வயது பூர்த்தியாகும் வரை காத்திருக்காமல் முன்கூட்டியே அதிபர்கள் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என ஆட்பதிவு திணைக்களத்தின் ஆணையாளர் ஜகத் விஜேவீர கூறியுள்ளார்.

விண்ணப்பதாரிகளுக்கு 16 வயது பூர்த்தியானவுடன் அவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகள் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் பரீட்சையின் போது எதிர்நோக்க நேரிடும் பிரச்சினைகளைத் தவிர்க்கும் வகையில் தேசிய அடையாள அட்டைகளை விநியோகிக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வதற்காக நாளாந்தம் ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுவதாக ஆட்பதிவு திணைக்களம் அறிவித்துள்ளது.

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களுக்கு அமைவாக காலதாமதமின்றி அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்கான ஒழுங்குகளை செய்துள்ளதாக ஆட்பதிவு ஆணையாளர் ஜகத் விஜேவீர கூறியுள்ளார்.

# எசலபோயா தின நிகழ்வுகள்

(கொழும்பு)

எசலபோயா தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் இரவு வவுனியா ஸ்ரீபோதிதக்சினாராமய விகாரையில் நடைபெற்ற விசேட போதிபூசையில் பெருமளவிலானவர்கள் கலந்து கொண்டனர்

சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

விகாரையின் பிரதம பிக்கு விமலசாரதேரே தலைமையில் எசல போயா தின நிகழ்வுகள் நடைபெற்றது.

அத்துடன், 10 ஆயிரம் மின் விளக்குகள் கொண்ட அலங்கார பந்தலும் காட்சிக்கு திறந்துவைக்கப்பட்டது. மாலை 7.00 மணி முதல் நள்ளிரவு வரை தொடர்ந்து ஐந்து தினங்களுக்கு இந்த நிகழ்வுகள் இடம்பெறும் எனவும் பிக்கு மேலும் கூறினார்.

பல ஆண்டுகாலமாக வவுனியாவில் எசல போயா தினம் அனுஷ்டிக்கப்பட்டுவருவதுடன் , மூவினத்தையும் சேர்ந்த மக்கள் பங்கு கொண்டுவருவது சிறப்பம்சமாகும். எனவும் அவர் கூறினார்.

(39)

# ஒலிம்பிக் சபையின் உபதலைவராக ஹேமசிறி

ஆசிய ஒலிம்பிக் சபையின் உப தலைவராக ஹேமசிறி பெனாண்டோ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜப்பானில் இடம்பெற்றுவரும் வருடாந்த ஆசிய ஒலிம்பிக் சபையின் கூட்டத்தின் போதே இவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ஹேமசிறி பெனாண்டோ தற்போதைய பொதுநலவாய விளையாட்டுகள் சம்மேளனத்தின் உபதலைவர் மற்றும் இலங்கை தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஜுபிலி ஆண்டு விழா இன்று கொடியேற்றம்

இவ்வருட நவநாள் கொண்டாட்டத்துடன் 150 ஆண்டு நிறைவடையும் குருநகர் சென். ஜேம்ஸ் தேவாலயம் ஜுபிலி ஆண்டுக் கொண்டாட்டத்துக்கான கொடியேற்றம் இன்று ஆரம்பமாகி பத்து தினங்கள் இம் மாதம் 25ஆம் திகதி திங்கட்கிழமை வரை கோலாகலமாக நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தினமும் மாலை 5.00 மணிக்கு ஆராதனைகள் ஆரம்பமாகும். எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நற்கருணை விழாவும், மறுநாள் 150ஆவது வருட ஜுபிலித் திருநாள் திருப்பலியும் இடம் பெறவிருக்கின்றன.

ஜுபிலி ஆண்டைக் கொண்டாடும் முகமாக ஆலயத்தின் உள்ளும், புறமும் பல லட்சம் ரூபா செலவில் ஆலயம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. 150ஆவது ஆண்டு மலர் வெளியீடும் நடைபெறும்.

குருநகர் நாட்டுக் கூத்து மன்றம் 'ஆளுமை' என்னும் பெயரில் சினிமாவாகத் தயாரித்துள்ள 'பண்டார வன்னியன்' தென்மோடி நாட்டுக் கூத்தின் இறுவட்டும் ஜுபிலி விழா வைபவத்தை ஒட்டி வெளியிட இருப்பதாகவும் தயாரிப்பாளர் கலைமாமணி கிறகரி கிறிஸ்தோப்பர் அறிவித்துள்ளார்.

(68)

## புலிகளின்....

பயன்படுத்தப்படும் 27,000 தோட்டாக்கள், 7.52 மி.மீ துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் 15,000 ஆகியனவும் இவற்றில் அடங்கும்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட பாரிய தேடுதலின்போது, 81 மி.மீ ரக மோட்டார் குண்டுகள் 54, 86 பௌண்டர் குண்டுகள் 3000, 130 மி.மீ ஏவுகருவிகள், ஆகியன கைப்பற்றப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் உபய மெதவல கூறினார்.

வெடிபொருட்கள் அற்ற 250 கிலோகிராம் விமான குண்டுகள் 4, வெடிபொருட்களுடன் கூடிய 250 கிலோகிராம விமானக் குண்டுகள் 6, எம்.பி.எம்.ஜி துப்பாக்கிகளுக்கான 2000 சுற்று தோட்டாக்கள் என்பனவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

## யாழ்.கட்டளைத்.....

முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசியல் இலாபத்துக்காக இராணுவத்தினருக்கு எதிராக குற்றம் சுமத்துவதாக தெரிவித்துள்ளார். அவர் இவ்வாறு தெரிவித்துள்ளமையானது அவர் அரசியலில் தேவையின்றி தலையிடும் ஒரு காரியம் எனவும், அவருக் கென்று ஒரு தொழில் உள்ளது, அதை மாத்திரம் செய்துகொண்டிக்க அவருக்கு தெரியவேண்டும்.

அளவெட்டியிலே எங்களுக்கு எதிராக நடத்தப்பட்ட தாக்குதல் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், அதை இராணுவத்தினரேதான் செய்ததாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரே ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தன் கீழுள்ள இராணுவத்தினரை கட்டுப்படுத்த தெரியாதவர், எம்மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தெரியாதவர், அரசியல் கட்சிகள் தொடர்பில் விமர்சனம் செய்வது நல்ல தல்ல, என்றார்.

## தென்மராட்சியில்...

வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டது.

மேலும் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான மலசலகூடப் பொருட்கள் 200 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டதுடன், சுயதொழில் கடனுதவிகள் பாடசாலை மாண வர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. அதேவேளை, கொடிகாமம் - பருத்தித்துறை வீதியை நேற்றுப் பிற்பகல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைந்து பொதுமக்கள் போக்குவரத்துக்காக திறந்து வைத்தனர்.

கடந்த யுத்த காலத்தின் போது இப்பாதை மூடப்பட்டு இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது. அதேவேளை, இராணுவத்தினரால் அப்பகுதியில் பயன்படுத்தப்பட்டு வந்த பொது மக்களின் வீடுகள் உரியவர்களிடம் கையளிக்கப்பட்டன.

(11)

# இளம் பெண்...

ஆரம்பித்ததும்; யுவதி மீது தானும் வீழ்ந்து கொண்டார்.

திடீரென வீதியில் அரங்கேறிய கோரச் சம்பவம் பார்த்தவர்களை அச்சம் கொள்ள வைத்தது. வீதியால் சென்றவர்கள் செய்வதறியாமல் திகைத்து நின்றனர். ஒரு சிலர் மட்டும் பாய்ந்து சென்று தீயை அணைக்க முற்பட்டனர். எனினும், யுவதியின் உயிர் அந்த இடத்திலேயே பிரிந்தது. குறித்த இளைஞர் யாழ்.மருத்துவமனைக்கு அவசர அவசரமாக எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். இவரின் நிலைமையும் கவலைக்கிடமாக உள்ளது.

அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் என்.சத்தியசீலன் (வயது-30) என்ற மேற்படி இளைஞன் நேற்று நள்ளிரவுக்குப் பின்னர் இன்று அதிகாலை வரை உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தார். வைத்தியர்களும் தீவிர சிகிச்சை முறைகளைப் பிரயோகித்த வண்ணம் இருந்தனர்.

உயிர் பிழைப்பார் என்ற நிலையைத் தாண்டி மிகவும் ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் மருத்துவர் கள் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப் பட்ட யுவதி சுதாகரன் அகிலா (வயது-28) யாழ்.கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்தவர் என்றும், இவரது குடும்பத்தினருக்கும் மேற்படி இளைஞனுக்கும் இடையில் ஏற்கனவே நட்புறவும், அறிமுகமும் காணப்பட்டதாகவும் இந்த உறவுகளில் ஏற்பட்ட பிறள்வுகளே இக்கொலைச் சம்பவத்துக்கு வித்திட்டிருக்கலாம் என்றும், இச்சம்பவத்தை விசாரணை செய்து வரும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்றும், இவர் தொழிலின் நிமித்தம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்ததாகவும் தெரியவருகிறது.

அதிகளவு சனநடமாட்டமுள்ள யாழ்.பிரதான வீதியில் பட்டப் பகலில் நடைபெற்ற இச்சம்பவம் யாழ். நகரில் நேற்றுப் பெரும் பரபரப் பை ஏற்படுத்தியது. சம்பவ இடத்தில் உடனடியாகவே சனக் கூட்டம் திரண்டிருந்தது. யுவதி பயணம் செய்த மோட்டார் சைக்கிள் வீதியில் சரிந்து கிடந்தது.

பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவந்தனர்.

## அப்பட்டமான...

சிக்கின்றனர்.

இவ்வாறான அரசியல் தலை வர்களால் ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொள்ள முடியாத நிலைமையை உணர்ந்துள்ள மக்கள் பெருமளவில் இன்று அரசுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

இதனைப் பொறுக்க முடியாத இவர்கள் இராணுவத்தின் மீது போலியான குற்றச்சாட்டுக்களைச் சுமத்த ஆரம்பித்துள்ளனர்.

மக்களைத் திசை திருப்பும் நோக்கில் முன் வைக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டுக்களில் எதுவித உண்மையும் இல்லை என்றும், அவற்றை முற்றாக மறுப்பதாகவும் கட்டளைத் தளபதி மேலும் தெரிவித்தார்.

## யாழில் ...


கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்தில் நடை பெற்றுள்ளது.

'ஜெயிக்கா' திட்டத்தின் கீழ் நடைபெற்ற இச்செயலமர்வில் யாழ்.பல்கலைக்கழக கடல்வளத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி குகதாசன், யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன், யாழ். மாவட்ட ஜெயிக்கா திட்டப் பணிப்பாளர் கே.யொனிசகா மற்றும் யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள், கடற்தொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் முதலானவர்கள் கலந்து கொண்டனர்.

(பா)

### செய்திப்பார்வை

**உலகெங்கும் டெங்கெனும் உயிர்க்கொல்லி நோய்பரப்பும்**
**அலகுடைய நுளம்பதால் ஆர்ப்பரித்தாம் - பல தோன்றும்**
**நீர்நிலைகள் குட்டைகளை நீக்கிப் புதுமெருகூட்டி**
**பார்உய்யப் பக்குவமாம் பார்!**



# மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்திற்காக உழைப்பவர் கரங்களைப் பலப்படுத்துவோம்

## அருட்தந்தை ஜேசுவா உரை



(யாழ்ப்பாணம்)

மக்களின் வாழ்வியல் முன்னேற்றத்தையும் பிரதேசத்தின் அபிவிருத்தியையும் பொறுப்பெடுத்து அதனை செயற்படுத்தி வருகின்றவர்களின் கரங்களை பலப்படுத்தவேண்டியது மக்களின் மிகப்பெரிய பொறுப்பாகும. எனவே அந்த வழியில் இன்று செயற்படுகின்றவர்களான ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினரை நாம் அனைவரும் ஓரேயணியில் நின்று ஆதரிக்க வேண்டும் என அருட்தந்தை ஜேசுவா அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை மலையாளப்புரம் திருவள்ளுவர் முன்பள்ளி விளையாட்டுப்போட்டி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

மக்களின் வறுமையைப் பற்றி பேசுவதானால் அரசியலைப் பற்றி பேச வேண்டும். பிரதேசங்களின் அபிவிருத்தி பற்றி பேசுவதானால் அரசியல் பற்றி பேச வேண்டும். இது தவிர்க்க முடியாதது ஒரு மத குருவாக இருந்து கொண்டு அரசியல் பற்றி பேசுகிறேன் என நினைக்கவேண்டாம். மக்களின் வறுமையை போக்கி பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்றால் நாம் அரசியல் பற்றிப் பேசித்தான் ஆக வேண்டும் எனவே அன்பிற்குரிய மக்களே கடந்த காலங்கள் போன்று மக்கள் தனித்தனியே சிதைந்து நின்று தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடாது அதில் எவ்வித நன்மையும் இல்லை. மக்கள் அனைவரும் ஒனறாக ஒரணியில் ஒரே தீர்மானத்தை மேற்கொள்ளவேண்டும். மக்களுக்காக செயற்படுகின்ற சரியான அரசியல் தரப்பினரை மக்கள் ஆதரிக்கவேண்டும். என அருடதந்தை அவர்கள் கேட்டுக் கொண்டார்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதி தலைவருமான மு.சந்திரகுமார் அவர்கள் இப்பிரதேசம் கடந்த காலங்களில் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டுள்ளமையை நாம் நன்கறிவோம். இப்பிரதேச மக்களின் குறைபாடுகள் தீர்க்கப்பட்டு ஒரு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்த வேண்டியது எமது பொறுப்புக் குறிப்பாக இப்பிரதேச மக்களின் பிரதான எதிர்பார்ப்பான மின்சாரத்தை ஒரு மாதத்திற்குள் பெற்றுத் தருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்தோடு இப்பிரதேசத்திற்கான ஒரு ஆரம்ப பிரிவு பாடசாலையினை அமைப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் ஆனால் அதற்கு முன் இக்கிராம மக்கள் அதிகளவான மாணவர்கள் உள்ளதனை உறுதிப்படுத்த வேண்டும் என கேட்டுகொண்டார்.

கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் சேகர் தலைமையில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டி நிகழ்வில் ஈ.பி.டி.பி. கட்சியின் மாவட்ட அமைப்பாளர் தவநாதன், பிரதேச சபை வேட்பாளர் ஜோசேப் கிருஸ்ணசாமி, பிரதேச இராணுவ அதிகாரி ஜெயதிஸ்ஸ, கிராம அலுவலர் சந்திரபாலன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# பரீட்சை அட்டவணை திடீர் மாற்றம்

(யாழ்ப்பாணம்)

தரம் 11 மாணவர்களுக்கான இரண்டாம் தவணைப் பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி நடைபெறவிருந்த முதலாம் தொகுதிப் பாட அட்டவணையில் குறிப்பிட்ட திகதியன்று அவுஸ்திரேலியா கல்வி நிறுவனம் நடாத்தும் இரசாயனவியல் பாடம் நடைபெறவிருப்பதனால் இரண்டாம் தவணைப்பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என யாழ். வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

30 ஆம் திகதி நடைபெறவிருந்த தரம் 11 இற்கான தொகுதிப் பாடம் ஒகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (எஸ்)

# சிறைச்சாலைக் கலகம் படை வீரருக்குச் சிறை

(கொழும்பு)

அனுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக குற்றவாளியாக காணப்பட்ட முன்னாள் இராணுவ வீரர் ஒருவருக்கு கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கைதிகளை கலகத்தில் ஈடுபடுத்தியமை, சிறைச்சாலை அதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்படாமை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் குறித்த இராணுவ வீரர் குற்றவாளியாக காணப்பட்டுள்ளார்.

இந்த ஒவ்வொரு குற்றச்சாட்டுக்காகவும் தலா ஆறுமாதம் வீதம் 24 மாதங்களுக்கு கடூழிய சிறைத்தண்டனை விதித்து அனுராதபுர மாவட்ட நீதிபதியும், மேலதிக நீதவானுமாகிய லக்மாலி ஹேவாவசம் தீர்ப்பளித்துள்ளார்.

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் பாரிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் இராணுவ அதிரடிப் படை வீரர் ஒருவருக்கே இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 23 ஆம, 24 ஆம் திகதிகளில் அனுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்ற மோதலில் இரண்டு கைதிகள் உயிரிழந்ததுடன், மேலும் எட்டு பேர் காயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# படை அதிகாரியிடம் கப்பம் மனைவியும் மகனும் கடத்தல்

## மத்துகம பிரதேசத்தில் தேடுதல் வேட்டை

(கொழும்பு)

மத்துகம பிரதேசத்தில் வான் படை அதிகாரி ஒருவரின் மனைவியும் மகனும் கடத்தப்பட்டுளளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐந்து இலட்ச ரூபா கப்பம் வழங்குமாறு கோரி குறித்த இருவரையும் கடத்திச் சென்றுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

28 வயதான பெண் ஒருவரும், பத்து வயது சிறுவன் ஒருவருமே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். பிரத்தியேக வகுப்பிற்கு சென்ற சிறுவனை மீள வீட்டுக்குத் தாய் அழைத்துச் செல்லும் சந்தர்ப்பத்தில் இந்த கடத்தல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கடத்தல்காரர்கள் தனது மனைவியின் கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்தி மனைவியைக் கொண்டே கப்பத்தை கோரியுள்ளதாக வான்படை உயரதிகாரி தெரிவித்துள்ளார்.

மீஹாதென்ன மற்றும் மத்துகம ஆகிய காவல் நிலையங்கள் கூட்டாக இணைந்து கடத்தப்பட்டவர்களைத் தேடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

# காத்திருக்கும் ஆபத்து

(மானிப்பாய்)

மானிப்பாய் - உடுவில் வீதியில் பேருந்து ஒன்றிலிருந்து பெருமளவு எரிபொருள் நிலத்தில் சிந்தியுள்ளதால் அவ்வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவ்வீதியால் சென்ற பேருந்து ஒன்றின் எரிபொருள் தாங்கியின் குழாய் உடைந்து பெருமளவு டீசல் வீதியில் சிந்தப்பட்டுள்ளது.

இதனால் வீதியால் மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டிகளில் பயணிப்போர் மிகவும் எச்சரிக்கையுடன் செல்ல வேண்டியிருக்கிறது

# தேர்தல் பிரச்சாரக்களமாக மாறுகிறது கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகள்

## கூட்டமைப்பின் துஷ்பிரயோகம்

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம், இலககம் இரண்டு பாடசாலை, ஐயனார்புரம் வித்தியாலயம், வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் சிலரும் இணைந்தே இந்தப் பிரச்சாரப் பணிகளில் ஈடுபடுவதாகத் தெரிய வருகின்றது. இதன் காரணமாகக் கல்வி நடவடிக்கைகள் குழப்பமடைவதாகப் பெற்றோர்களும், நலன்விரும்பிகளும் விசனமடைந்துள்ளனர். அரச ஊழியர்களோ அலலது அரசாங்க சொத்துக்களையோ தேர்தல்களுக்குப் பயன்படுத்துவது தேர்தல் சட்டவிதிகளுக்கு எதிரானது என்பது குறிப்பிடத்தக்கது. (29)

# விளையாட்டு விழா

கெருடாவில் தொண்டைமானாறு அம்பிகை முன்பள்ளியின வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை மைதானத்தில் இ.குணசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வின பிரதம விருந்தினராக பருத்தித் துறைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் பா.ரகுநாதன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக கெருடாவில் தெற்கு கிராமசேவையாளர் எஸ்.வன்னிமரம், கெருடாவில் இந்துத் தமிழ் கலைவன் பாடசாலை அதிபர் து.அருந்தவராசா, தொண்டைமான் நகர் வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலய அதிபர் இரா. ஸ்ரீநடராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (109)

# வேலையாட்கள் தேவை

## இயந்திர இயக்குநர்கள்

**Kord, Sord** ஆகிய அச்சு இயந்திரங்களில் வேலை செய்து முன் அனுபவம் உள்ளவர்களும் பயிற்சி பெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

## பேப்பர் வெட்டுதல் | புத்தகம் கட்டுபவர்

பேப்பர் வெட்டுவதிலும், புத்தகம் கட்டுவதிலும் முன் அனுபவம் உள்ளவர்களும், பயிற்சி பெற விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

- மேற்படி பதவி நிலைகளில் இரவு / பகல் ஆகிய நேரங்களில் கடமையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
- 25 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்க லாம். சிறந்த தேகாரோக்கியம் உள்ளவர்கள் விரும்பத்தக் கது.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது சுயவிபரக்கோவையுடன் எதிவரும் 18ஆம் திகதி காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரி யில் அமைந்துள்ள தினமுரசு காரியாலயத்துக்கு நேரடியாக வருகை தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**ஆளணி முகாமையாளர்,**
**தினமுரசு,**
**யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

## வேலன் முருகேசு (செல்வராசா)

(முன்னாள் உரிமையாளர் – சாயி மெடிக்கல் நெல்லியடி)



நெல்லியடி மகாத்மா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் முருகேசு கடந்த (12.07.2011) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலன் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், இரத்தினம் அவர்களின் அன்புக்கணவரும், அமரர் சண்முகம், கந்தவனம் (ஜெயம்), முத்து (சோதி), பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், முருகவேள் (சுதன் - சுவிஸ்), சதீஸ்குமார் (சுவிஸ்), அனுதா (இத்தாலி), பபிதா (லண்டன்), உதயசங்கர் (ஜேர்மன்), சபேஸ் குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் கிரியைகள் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாகாத்மா வீதி,
நெல்லியடி.

தகவல்:-
குடும்பத்தினர்

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 யூலை 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.